மலர்: 01 இதழ்: 12 அக்டோபர் 2023 விலை: ₹ 20/-

# பேனா குரல்

PENA KURAL

தமிழ் மாத இதழ்



## தூய்மைப் பணியில் பிரதமர் பங்கேற்பு

மத்திய அமைச்சர்கள், ஆளுநர்கள், முதல்வர்கள் உள்பட பலர் பங்கேற்பு



## "பட்டினி இல்லாத இந்தியாதான் என் கனவு"

MS SWAMINATHAN

(1925-2023)

# சாதனை படைத்த தமிழ்நாட்டு விண்வெளி விஞ்ஞானிகளுக்குப் பாராட்டு விழா



# சோழிங்கநல்லூர் மத்திய பகுதி மேட்டுக்குப்பம் 195வது வட்டம் பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக அன்னதானம் நடைபெற்றது















பாட்டாளி மக்கள் கட்சியின் சோழிங்கநல்லூர் மத்திய பகுதி மேட்டுக்குப்பம் 195வது வட்டம் சார்பாக மேட்டுக்குப்பம், பிள்ளையார் கோவில் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீ ருக்மணி - ஸ்ரீ சத்ய பாமா சமேத ஸ்ரீ வேணுகோபால சுவாமி பெருமாள் திருக்கோவிலில் 07-10-2023 அன்று புரட்டாசி மாதம் மூன்றாவது சனிக்கிழமையை முன்னிட்டு பகுதி செயலாளர் திரு.துரை.சந்துரு அவர்களின் முன்னிலையில் சிறப்பு அன்னதானம் நிகழ்வு மேளதாளத்துடன் மிக சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் பாட்டாளி மக்கள் கட்சியின் 195வது வட்ட அனைத்து நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர்.

பேனா குரல்
PENA KURAL
TNTAM/2022/85375
தமிழ் மாத இதழ்
மலர்: 01 இதழ்: 12 அக்டோபர் 2023 விலை: ₹ 20/- ஆண்டு சந்தா: ₹ 240/-

## தலையங்கம்

ஆசிரியர் குரல்

# காவிரியை மட்டும் நம்பியிருந்தால் போதாது!

உச்சநீதிமன்ற உத்தரவுப்படி உருவாக்கப்பட்ட காவிரி மேலாண்மை ஆணையமும் சரி, காவிரி ஒழுங்காற்றுக் குழுவும் சரி பெயருக்குச் செயல்படுகின்றனவே தவிர, உத்தரவுப்படி தண்ணீர் திறந்து விடப்படுவதை உறுதிப்படுத்தும் அதிகாரம் பெற்றவையாக இல்லை என்பதுதான் பிரச்னை. தமிழகத்துக்கு அவ்வப்போது பருவமழைதான் உதவி இருக்கிறதே தவிர, அரசின் நீதி பரிபாலன அமைப்புகள் உதவியதே இல்லை.

ஒவ்வொரு முறை பருவமழை பொய்க்கும்போதும், தண்ணீருக்காக தமிழகம் போராட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் போதுமான மழைப் பொழிவு இருந்ததால், 2018 உச்சநீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகு நாம் ஓரளவுக்கு சமாளிக்க முடிந்தது. 1991, 2002, 2012, 2016 ஆண்டுகளைப் போலவே இப்போதும் நாம் கைபிசைந்து நிற்க வேண்டிய நிலைமை.

மத்திய அரசின் ஜல்சக்தித் துறை இணைய தளத்தில் ஐந்து ஆணையங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை இடைக்காலத் தீர்ப்புக்கு உதவியிருக்கின்றனவே தவிர, நிரந்தரத் தீர்வை அளிப்பதில்லை. அவை முன்வைக்கும் நீர்ப் பங்கீட்டு ஒப்பந்தங்கள், அப்போதைய நிலைமையின் அடிப்படையிலானவை. அவற்றுக்கு எந்தவித சட்டப் பின்புலமோ, அதிகாரமோ இல்லை என்பதால், பெரும்பாலான தீர்ப்புகள், நீதிமன்ற வழக்காக மாறி நிலுவையில் தொடர்கின்றன.

2050-இல் இந்தியா மிகப் பெரிய தண்ணீர் பற்றாக்குறையை எதிர்கொள்ள இருப்பதாக பல்வேறு ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன. அப்படி இருக்கும் நிலையில், நதிநீர்ப் பங்கீடுகளுக்கு நிரந்தர அடிப்படையில் தீர்வு காணப்படுவது அவசியமாகிறது. முதலில், காவிரி நதியில் கட்டப்பட்டிருக்கும் எட்டு அணைகளும் முறையாகத் தூர்வாரப்படாமல், அவற்றின் நீர் இருப்பைக் கணக்கிட முடியாது. இரண்டாவதாக, அணையின் நீர்ப்பிடிப்பு மட்டுமல்லாமல், நிலத்தடி நீர், நிலத்தின் ஈரப்பதம் போன்றவையும் கணக்கில் எடுக்கப்பட்டு நதிநீர்ப் பங்கீடு நடத்தப்பட வேண்டும்.

கர்நாடகம் தமிழகத்துக்குத் தரவேண்டிய தண்ணீரின் அளவு 177.25 டி.எம்.சி. என்பது உச்சநீதிமன்றத் தீர்ப்பு. பருவமழை பொழிந்ததால், 2020 - 21-இல் 211.31 டி.எம்.சி.யும், 2021 - 22 -இல் 281.05 டி.எம்.சி.யும், 2022 - 23 -இல் 667.78 டி.எம்.சி.யும் நமக்குக் கிடைத்தது. அணைகள் நிரம்பி வழிந்ததால், உபரி நீரைத் தேக்கி வைக்க முடியாமல் கர்நாடகம் தங்குதடையின்றிக் காவிரியைக் கரைபுரண்டோட அனுமதித்தது என்பதுதான் உண்மை.

தொடர்ந்து நான்கு ஆண்டுகளாகக் கடலில் கலந்த உபரி நீரின் அளவு 259 டி.எம்.சி. என்று தெரிவிக்கிறது டி.எஸ். விஜயராகவன் குழு. அந்தத் தண்ணீரை தடுப்பணைகள் மூலம் தேக்கி வைக்க முடியாமல் போனது நமது இயலாமை. பாசனத்துக்கு அதிகமாகத் தண்ணீர் தேவைப்படும் நெல், கரும்பு விவசாயத்திலிருந்து, பயறு வகைகள், எண்ணெய் வித்துகள், சிறு தானியங்கள் விவசாயத்துக்கு நமது விவசாயிகளை மாற்றுவதற்கான முயற்சியும் முன்னெடுக்கப்படுவதில்லை.

– **ராதிகா சிவசங்கர்**, ஆசிரியர்

# ஐஐடி மெட்ராஸ், எரிக்சன் நிற
# செயற்கை நுண்ணறிவு ஆ

சென்னையில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் (ஐஐடி மெட்ராஸ்) சென்டர் ஃபார் ரெஸ்பான்சிபிள் ஏஐ (செராய்), எரிக்சன் நிறுவனத்துடன் இணைந்து பொறுப்பான செயற்கை நுண்ணறிவு தொடர்பான கூட்டு ஆராய்ச்சியில் ஈடுபட இருப்பதாக அறிவித்துள்ளது. இந்நிகழ்வையொட்டி, எதிர்கால நெட்வொர்க்களுக்கான பொறுப்பான செயற்கை நுண்ணறிவு பற்றிய கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் எரிக்சன் ரிசர்ச் மற்றும் ஐஐடி மெட்ராஸ் ஆகியவற்றின் மூத்த அதிகாரிகள் பங்கேற்று, 'ரெஸ்பான்சிபிள் ஏஐ' (பொறுப்பான செயற்கை நுண்ணறிவு) களத்தின் முன்னேற்றம் மற்றும் மேம்பாடு குறித்து விவாதித்தனர்.

ஐஐடி வளாகத்தில் இன்று நடைபெற்ற நிகழ்வில், 'பிளாட்டினம் கூட்டமைப்பு உறுப்பினராக' செராயுடன் ஐந்தாண்டுகளுக்கு இணைந்து செயல்பட ஒப்பந்தம் ஒன்றில் எரிக்சன் நிறுவனம் கையெழுத்திட்டுள்ளது. இந்த புரிந்துணர்வின்படி, செராயின் அனைத்து ஆராய்ச்சி நடவடிக்கைகளிலும் எரிக்சன் ரிசர்ச் பங்கேற்று ஆதரவு அளிக்கும்.

'சென்டர் ஃபார் ரெஸ்பான்சிபிள் ஏஐ' என்பது, பொறுப்பான செயற்கை நுண்ணறிவில் அடிப்படை மற்றும் பயன்பாட்டு ஆராய்ச்சிக்கான முதன்மை மையமாகவும், செயற்கை நுண்ணறிவு அமைப்புகளைப் பயன்படுத்தி இந்திய சுற்றுச்சூழல் அமைப்பில் உடனடி தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய இடைநிலை ஆராய்ச்சி மையமாகவும் திகழ்கிறது.




6ஜி நெட்வொர்க்குகள் செயற்கை நுண்ணறிவு வழிமுறைகளைக் கொண்டு சுயமாக இயங்கக்கூடும் என்பதால், எரிக்சன் நிறுவனத்தின் ஏஐ ஆராய்ச்சி அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

கருத்தரங்கில் தலைமை விருந்தினராக உரைநிகழ்த்திய ஐஐடி மெட்ராஸ் (தொழில்துறை ஆலோசனை மற்றும் நிதியுதவி ஆராய்ச்சி) டீன் பேராசிரியர் மனு சந்தானம் கூறும்போது, "ஏஐ தொடர்பான ஆராய்ச்சி நாளைய வணிகங்களை இயக்குவதற்கான கருவிகளை உருவாக்குவதாகும்.

# குருமலை காப்பு காடு... பு

சுமார் 1,254 ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த மலைப் பகுதியில் அரியவகை மூலிகை செடிகள், புள்ளி மான்கள், கடமான், கீரி, புனுகு பூனை, நரி, முயல், கவுதாரி, மயில்கள் அதிகமாக காணப்படுகின்றன. பறவையினங்கள், ஊர்வன இனங்கள் மிகுந்த வனப்பகுதியாகவும் உள்ளது. இந்த குருமலை வனப்பகுதி கடந்த 1980-ம் ஆண்டு காப்பு காடு பகுதியாக அறிவிக் கப்பட்டது. இங்கு நல்ல தண்ணீர் சுனையும் உள்ளது. இந்த காப்பு காடு பகுதிக்கு காணும் பொங்கலின் போது மக்கள் அதிகம் வருவது வழக்கம்.மற்ற நேரங்களில் வனத்துறை அனுமதி பெற்ற பின்னர் தான் உள்ளே செல்ல முடியும். காப்பு காடு பகுதி முழுவதும் கோவில்பட்டி வனச்சரகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது.

இங்கிருந்து வழி தவறி வரும் மான்கள் வாகனங்களில் அடிபட்டும், நாய்கள் கடித்தும் உயிரிழக்கும் சம்பவங்கள் அதிகம் நடக்கின்றன. விவசாய நிலங்களுக்குள் புகுந்து பயிர்களை மான்கள் சேதப்படுத்தி விடுகின்றன. குருமலை காப்பு காடு பகுதியை வன உயிரின சரணாலயமாகவோ அல்லது புள்ளி மான் சரணாலயமாகவோ அறிவித்து, அறிவியல் முறையில்



# றுவனம் ஆகியவை இணைந்து
# ராய்ச்சியில் ஈடுபடுகின்றன




தொழில்துறையுடன் இணைந்து, தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் செயலாற்ற முடியும் என ஐஐடி மெட்ராஸ் உறுதியாக நம்புகிறது. எரிக்சன் நிறுவனத்துடன் இணைந்து இந்த அதிநவீன ஆராய்ச்சிப் பணியில் கூட்டாண்மையுடன் செயல்படுவது மகிழ்ச்சி அளிக்கிறது'' என்றார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய எரிக்சன் ரிசர்ச் குளோபல் ஹெட் டாக்டர் மெக்னஸ் ஃப்ரோடிக், "ஏஐ-கட்டுப்படுத்தும் சென்சார்கள் மனிதர்கள் மற்றும் இயந்திரங்களை இணைக்கும் அதே வேளையில், நம்பிக்கை, நேர்மை மற்றும் தனியுரிமை இணக்கத்தை உறுதி செய்ய பொறுப்பான செயற்கை நுண்ணறிவு நடைமுறைகள் அவசியமாகிறது. பாரத் 6ஜி திட்டத்திற்கான இந்திய அரசாங்கத்தின் தொலைநோக்குப் பார்வையுடன் ஐஐடி மெட்ராஸ்-ன் செராய் இந்த கூட்டு முயற்சியில் இணைந்துள்ளது'' எனத் தெரிவித்தார்.

கருத்தரங்கின்போது கூட்டாண்மையைப் போற்றும் வகையில், 'எதிர்கால நெட்வொர்க்களுக்கான பொறுப்பான செயற்கை நுண்ணறிவு' என்ற தலைப்பில் குழு விவாதத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அத்துடன் 'ரெஸ்பான்சிபிள் ஏஐ' மையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் தற்போதைய ஆராய்ச்சி நடவடிக்கைகளில் சில அங்கு காட்சிப்படுத்தப்பட்டன.

இக்கருத்தரங்கில் உரைநிகழ்த்தியவர்கள் மற்றும் குழு விவாதத்தில் இடம்பெற்றவர்கள் வருமாறு- ஐஐடி மெட்ராஸ் குவால்கம் இன்ஸ்டிடியூட் ஆராய்ச்சிப் பேராசிரியரான பேரா. ஆர்.டேவிட் கோயில்பிள்ளை, ஐஐடி மெட்ராஸ் செராய் முக்கிய உறுப்பினர் டாக்டர் ஹரீஷ் குருபிரசாத், செராய் முக்கிய உறுப்பினர் டாக்டர் அருண் ராஜ்குமார், எரிக்சன் ரிசர்ச் ஏஐ தலைவர் டாக்டர் ஜோர்கன் குஸ்டாப்சன், எரிக்சன் ரிசர்ச் நிறுவனத்தின் க்ளவுட் சிஸ்டம்ஸ் அண்ட் பிளாட்பார்ம்ஸ் தலைவர் டாக்டர் கேட்ரின் கிரான்போம், எரிக்சன் ரிசர்ச் இந்தியா-வின் ஏஐ/எம்எல் ஆராய்ச்சித் தலைவர் கவுஷிக் டே ஆகியோர்.

- A.தங்கராஜ்

# ள்ளி மான்களின் புகலிடம்!



மேலாண்மை செய்து வன விலங்குகளையும், விவசாயிகளையும் காக்க வேண்டும் என்று கோரிக்கை எழுந்துள்ளது.

இது குறித்து மதிமுக நகரச் செயலாளர் எஸ்.பால்ராஜ் கூறும்போது, "புள்ளி மான்கள் 14 மாதங்களில் 2 குட்டிகளை ஈன்றுவிடும். இதனால் தற்போது புள்ளி மான்களின் எண்ணிக்கை பன்மடங்கு அதிகரித்துள்ளது. அதற்கேற்ப அதன் வாழ்விடத்தை சரிவர மேலாண்மை செய்யாததால் புள்ளி மான்கள், மயில்கள் உள்ளிட்டவை குடிநீர், உணவு தேவைக்காக வெளியேறி பயிர்களை சேதப்படுத்தி வருகின்றன.

குருமலை காப்பு காடு பகுதியை சரணாலயமாக அறிவித்தால் மத்திய, மாநில அரசுகளின் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு மான்களுக்கு தேவையான தண்ணீர், உணவு மற்றும் வாழ்விடம் உருவாக்கப்படும். மேலும், வேட்டை தடுப்பு காவலர்கள், மீட்பு வாகனங்கள் மற்றும் கூடுதல் பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள். வனவிலங்குகள் காப்பு காட்டை விட்டு வெளியேறாமல் கண்காணிக்கப்படும்'' என்றார். •




# இந்தியா ஆன்மிகத்தோடு வளர வேண்டும்: கவர்னர் ஆர்.என்.ரவி பேச்சு

சென்னையில் நடைபெற்ற வள்ளலார் சிலை திறப்பு விழாவில் தமிழக கவர்னர் ஆர்.என். ரவி கலந்து கொண்டார். இந்த விழாவில் பேசிய அவர், 'பாரத்' என்பதன் முக்கியத்துவத்தை மாணவர்கள் உணர வேண்டும் எனவும், இதனை பாடப்புத்தகத்தில் பாடமாக வைக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

'பாரத்' என்பது ஆன்மிகவாதிகள் மற்றும் ரிஷிகள் மூலம் ஒருங்கிணைக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார். அனைவரும் ஒன்று என்று வள்ளலார் கூறுவது தான் சனாதன தர்மத்தின் மூலம் என்று கூறிய கவர்னர் ஆர்.என்.ரவி, இதனை புரிந்து கொள்ளாமல் சிலர் பேசி வருவதாகவும், சமூகத்தில் உள்ள வேற்றுமைகளை சனாதனம் எனக் கூறும் நபர்களை என்ன சொல்வது என்றே தெரியவில்லை எனவும் கூறினார்.

தான் ஒரு சனாதனவாதியாக இருப்பதால், எவர் தன்னை அசிங்கப்படுத்தினாலும் அவர்களை ஒதுக்க முடியாது என்றும், அதைத் தான் சனாதனம் கூறுகிறது என்றும் ஆர்.என்.ரவி கூறினார். மேலும் அறிவியல், பொருளாதார வளர்ச்சியாக மட்டும் இல்லாமல், ஆன்மிகத்தோடு வளர வேண்டும் என்றும், சனாதனம் வலியுறுத்தும் ஒரே குடும்பமாக வளர வேண்டும் என்றும் கவர்னர் ஆர்.என்.ரவி தெரிவித்தார். •






நிலம் வாங்கி பத்திரப் பதிவு செய்யும் போது சொத்துக்களின் புகைப்படமும், புவியியல் விவரங்களும் இடம் பெறுவது கட்டாயம் என தமிழ்நாடு பத்திரப்பதிவு துறை அறிவித்துள்ளது.

நிலங்களின் புகைப்படம், புவியியல் விவரங்களுடன் பத்திரப் பதிவு செய்யும் நடைமுறை தமிழ்நாட்டில் அக்டோபர் 1 முதல் அமலுக்கு வருகிறது. இதுநாள் வரை சொத்துகளைப் பதிவு செய்யும் போது நிலம், வீடுகளின் புகைப்படம் சேர்ப்பது இல்லை.

இதனால் வீடுகளைப் பத்திரப்பதிவு செய்யும் போது காலி மனை என்று கூறி பதிவு செய்கிறார்கள். இதனால் ஏற்படும் கோடிக்கணக்கான வருவாய் இழப்பை தவிர்க்கும் வகையில் அக்.1ம் தேதி முதல் நிலங்களின் புகைப்படம், புவியியல் விவரங்களுடன் பத்திரப் பதிவு துறை தமிழ்நாட்டில் நடைமுறைக்கு வருகிறது. தமிழ்நாடு பத்திரப் பதிவுத் துறை நிலங்களின் புகைப்படங்களை சேர்ப்பதை கட்டாயமாக்கியுள்ளது.

இதுகுறித்து முன்னாள் கூடுதல் பத்திரப் பதிவுத்துறை தலைவர் ஆறுமுக நயினார் கூறுகையில், “அரசுக்கு ஏற்படும் வருவாய் இழப்பு மற்றும் முறைகேடுகளை தவிர்க்க இந்த நடைமுறை கொண்டு வரப்படுவதாக கூறினார்.

பொதுமக்கள் பத்திரப்பதிவுக்கு வரும்போது சொத்தில் உள்ள அனைத்து விவரங்களையும் தெரிவிக்க வேண்டும். சொத்தில் உள்ள கட்டடங்கள் போன்றவற்றிக்கு முழுமையான முத்திரைத்தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்தும் படி செய்வதற்கான நடவடிக்கையே இந்த புதிய நடவடிக்கை ஆகும். வருவாயை பெருக்கும் நோக்கத்துடன் அரசு முடிவு செய்துள்ளது.

பத்திரப்பதிவு நிலப் படத்தை சார் பதிவாளரிடம் கொடுத்தால் அவர் எவ்வாறு ஆவணங்களை எழுத வேண்டும் என்று வழிகாட்டுவார். பதிவுத் செய்யும் போது சொத்தில் உள்ள அனைத்து விவரங்களும் ஆவணத்தோடு சேர்த்து பதிவு செய்யப்பட்டுள்ளாத என்பதைப் பார்ப்பதுடன் விவரங்கள் பாதுகாப்பாக இருக்கும் என்று கூறினார். மனை அல்லது வீடுகளை சேர்க்கும் நடைமுறை அனைத்து சார் பதிவாளர் அலுவலங்களிலும் பின்பற்றப்படும்“ என அறிவிக்கப்பட்டுள்ளது.

- Ba.**சரவணன்**



# இந்தியாவில் மூன்று செயற்கை நுண்ணறிவு மையங்கள்:

## கல்லூரி விழாவில் நிதியமைச்சர் தகவல்

“இந்தியாவில், மூன்று இடங்களில், ‘ஆர்டிபிஷியல் இன்டெலிஜன்ஸ்’ எனும் செயற்கை நுண்ணறிவு நவீன மையம் அமையவுள்ளது. அதில் ஒன்று தமிழகத்தில் அமையவேண்டும் என்பது என் விருப்பம்,’’ என, மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கல்லூரி விழாவில் பேசினார்.

கோவை பீளமேடு பி.எஸ்.ஜி.ஆர்., கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரியின் வைரவிழா ஆண்டு கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பங்கேற்று, மாணவியருடன் கலந்துரையாடினார்.

இதில், அவர் மாணவிகளின் கேள்விகளுக்கு பதிலளித்து பேசியதாவது:

பெண்களுக்கு, 33 சதவீத இடஒதுக்கீடு அனைத்து கட்சிகளும் ஏற்று நிறைவேற்றியுள்ளோம்.

**இந்தியாவில் ஏ.ஐ., மையங்கள்**

ஆர்டிபிஷியல் இன்டெலிஜன்ஸ் எனும் ஏ.ஐ., எனப்படும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், அனைத்து துறைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதிக வரி ஏய்ப்புகள் நடக்கின்றன; தற்போது ஏ.ஐ., தொழில்நுட்பத்தால் வரி ஏய்ப்பு செய்பவர்களை, எளிதில் ‘டிரேஸ்’ செய்துவிட முடியும். இதனால், தான் ஒரே சமயத்தில் 30 ரெய்டுகள் நடக்கின்றன.

ஒருவரை தொட்டால், சங்கிலி தொடர் போல் அனைவரும் எளிதாக மாட்டி விடுவார்கள். இதை உணராமல், அரசியல் செய்வதாக கூறுகின்றனர். இந்தியாவில், மூன்று இடங்களில் ஆர்டிபிஷியல் இன்டெலிஜன்ஸ் நவீன மையம் அமையவுள்ளது; அதில் ஒன்று தமிழகத்தில் அமையவேண்டும் என்பது எனது விருப்பம்.

இவ்வாறு, அவர் பேசினார்.

பா.ஜ.,தேசிய மகளிர் அணி தலைவி வானதி சீனிவாசன், பி.எஸ்.ஜி.ஆர்., கிருஷ்ணம்மாள் கல்லூரி தலைவர் நந்தினி, செயலர் யசோதா தேவி, முதல்வர் மீனா உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

- பா.அசோக்குமார்

# 77 வயது முதியவரின் சொத்தை அபகரிக்க திட்டம் தீட்டிய பாஜக நிர்வாகி

திருச்சி மாவட்டம், தொட்டியம் தாலுக்கா, காட்டுப்புத்தூர், குளத்துப்பாளையத்தை பூர்விகமாக வசித்து வந்த K.P.சங்கரன் (வயது 77) தற்போது நமக்கல், கந்தம்பாளையத்தில் தனது மகள் வீட்டில் வசித்து வருவருகிறார் இவரது சொத்தை அபகரிக்கவும் அல்லது சுமார் 8 லட்சத்திற்கு மேல் பணம் தர வேண்டும் என்றும் K.P.சங்கரன் என்பவரின் கையெழுத்தை போலியாக போட்டு அவரது கைரேகையை அவர்களே வைத்து அந்த கைரேகையும் சோதனை செய்ய முடியாதபடி அழித்து போர்ஜரி மற்றும் பித்தலாட்டம் செய்து நாமக்கல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து உள்ளது சம்பந்தமாக **சேலம் சரக டிஐஜி** அவர்களிடம் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

திருச்சி மாவட்டம் தொட்டியம் தாலுகா காட்டுப்புத்தூர், சீத்தப்பட்டியை சேர்ந்த செல்லப்பன் மகன் S.நந்தகுமார் நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த செல்ல முத்து மகன் சுரேஷ், அதே மாவட்டத்தைச் சேர்ந்த முத்துச்சாமி மகன் கிருஷ்ணன் ஆகிய மூவரும் கூட்டு சதி செய்து போலியான ஆவணங்களை தயார் செய்து, 77 வயதான முதியவரின் சொத்தை அபகரிக்கும் நோக்கத்துடனும், கடன் வாங்கியதாகவும், புனையப்பட்ட போலியான ஆவணங்களை வைத்து நாமக்கல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து சம்பந்தமாக மிகுந்த மன உளைச்சலுடனும் இருந்து வருவதாகவும். இந்த மூன்று நபர்களிடம் நான் எந்த கையெழுத்தும் போட்டு எனது இடது பெருவிரல் ரேகை வைத்து நான் பணம் வாங்கவில்லை என்றும், இவர்கள் யார் என்றே எனக்கு தெரியாது என்றும், பல்வேறு உடல் உபாதைகளுடன் நான் வயது முதிர்ந்த இருக்கும் இந்த நிலையில் எனது பெயருக்கும், எனது புகழுக்கும் கேடு விளைக்கும் வகையில் செயல்பட்டு வருகிறார்கள் என்றும் இவர்களை சட்டத்திற்கு முன் நிறுத்தி உரிய விசாரணை நடத்த வேண்டும் என்று புகாரியில் தெரிவித்துள்ளதாக தெரிகிறது.

தற்போது இந்த வழக்கு நாமக்கல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால் இந்த ப்ரோ நோட் கையப்பம் மற்றும் கைரேகை அனைத்தும் போலி என்று மாண்புமிகு நீதி அரசரின் தீர்ப்பு வந்தவுடன், மாண்புமிகு நீதி அரசர் அவர்கள் இந்த போலியான வழக்கை தொடர்ந்தது பொன்னான நீதி அரசரின் நேரத்தை வீணடித்ததும் இல்லாமல், நீதி அரசரையே ஏமாற்ற முயற்சித்த குற்றத்திற்காகவும் 77 வயது



K.P.சங்கரன்
பாதிக்கப்பட்டவர்

முதியவரின் சொத்தை அபகரிக்க திட்டமிட்டதாகவும், இந்த தள்ளாத வயதில் அவரை அலையடித்ததற்காகவும் போலியாக வழக்கு பதிவு செய்த மூன்று நபர்களும் K.P.சங்கரன் அவர் களுக்கு குறைந்தபட்சம் தலா 50 லட்சம் ரூபாய் மான நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்றும், இந்த மூவருக்கும் கடுங்காவல் தண்டனை வழங்கி உத்தரவிட வேண்டும்.

இந்த மாதிரி போலி போர்ஜரி ஆசாமிகளுக்கு இதுவே தக்க பதிலடியாகவும், தக்க தண்டனையாகவும் இருக்க வேண்டும் என்று பல்வேறு சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் இதை அறிந்து தெரிவிப்பதாக தெரிகிறது.

இந்தப் புகார் மனு எண்.: G2/5052/2023 PGR/327/DIGSLM (R)2023 சம்பந்தமாக நாமக்கல் மாவட்ட காவல்துறையினர் தீவிர விசாரணை நடத்தி நந்தகுமார் போன்றவர்களுக்கு தக்க தண்டனை வாங்கி கொடுப்பார்களா?.

**S.நந்தகுமார் S/O செல்லப்பன் இவர் திருச்சி மாவட்டம் தொட்டியம் தாலுகா பாரதிய ஜனதா கட்சியின் ஒன்றிய பொதுச் செயலாளராக இருப்பதாகவும் தெரிய வந்தது. இவரைப் போன்ற போர்ஜரி பேர்வழிகளை கட்சியில் வைத்திருந்தால் கட்சிக்குதான் கலங்கம் விளைவிக்கும். உடனடியாக பாரதிய ஜனதா கட்சியின் மாநில தலைவர் திரு.அண்ணாமலை அவர்கள் கட்சிக்கு கலங்கும் விளைவிக்கும் வகையில் செயல்படும் இவரை போன்ற நபர்களை கட்சி யிலிருந்து தூக்கி எறிய வேண்டும் என்று பிஜேபி கட்சியில் உள்ளவர்களே தெரிவித்து வருகிறார்கள். இவர்களைப் போல் மக்களுக்கு கேடு விளைவிப்பவர்களை கட்சியில் இருந்தால் கட்சியை எப்படி வளர்க்க முடியும்?**



போர்ஜரி மன்னன்
கந்துவட்டி நந்தகுமார்

**- தலைமை நிருபர், நவின்குமார்**

**1960**-களில் இந்தியாவில் உணவுப் பஞ்சம் தலைவிரித்தாடியது. அதைத் தடுக்க இந்திய அரசு பல தீவிர நடவடிக்கைகளை எடுத்தது. அதில் முக்கியமானது பசுமைப்புரட்சி.

அதற்கு அடித்தளமிட்டவர், பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்த வேளாண் விஞ்ஞானியான பெஞ்சமின் பியாரி பால் (1906- 1989). கோதுமை சாகுபடியில் உயர் விளைச்சல் தரும் ரகங்களை உருவாக்கியவர் அவர்.

அவரது அடியொற்றி, உணவு தானிய உற்பத்திப் பெருக்கத்துக்கான திட்டங்கள் இந்திரா காந்தி பிரதமராக இருந்தபோது (1966) தீட்டப்பட்டன. அப்போதைய மத்திய வேளாண்மைத்துறை அமைச்சர் சி.சுப்பிரமணியமும், வேளாண் விஞ் ஞானி எம்.எஸ்.சுவாமிநாதனும் அத்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தினர்.

உலகின் பிச்சைப் பாத்திரம் என்று 1960களில் கேலிசெய்யப்பட்ட இந்தியாவை, உலகின் உணவுப் பாத்திரம் என்று அழைக்கும் வகையில் மாற்றியவர் எம்.எஸ். சுவாமிநாதன்.


உயர் விளைச்சல் தரும் வீரிய ரகங்கள், மேம்பட்ட உரப்பயன்பாடு, முறையான நீர்ப்பாசனம், பூச்சிக்கொல்லி மருந்து நிர்வாகம் ஆகிவற்றின் கலவையான இத்திட்டத்தால், 1970-களில் இந்தியாவின் உணவு தானிய உற்பத்தி, தேவையைவிட அதிகரித்தது. உணவுக்காக பிற நாடுகளைச் சார்ந்திருக்கும் நிலைமை அப்போது மாறியது.

இத்திட்டத்தின் நாயகராக தமிழகத்தைச் சேர்ந்த வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் கருதப்படுகிறார். இந்திய பசுமைப்புரட்சியின் தந்தை என்றும் அவர் அழைக்கப்படுகிறார்.

தமிழகத்தின் கும்பகோணத்தில் மருத்துவர் சாம்பசிவன்- பார்வதி தங்கம்மாள் தம்பதியின் இரண்டாவது மகனாக 1925, ஆகஸ்ட் 7-இல் பிறந்தார் சுவாமிநாதன். மான்கொம்பு சதாசிவன் சுவாமிநாதன் என்பதன் சுருக்கமே எம்.எஸ்.சுவாமிநாதன்.

அவரது தந்தை சாம்பசிவன் மகாத்மா காந்தியால் கவரப்பட்டு அந்நியத் துணி எதிர்ப்பு இயக்கத்திலும் ஹரிஜன ஆலயப் பிரவேசப் போராட்டத்திலும் பங்கேற்றவர். கும்பகோணத்தில் அக்காலத்தில் பரவிய யானைக்கால் வியாதியை ஒழித்ததில் பெரும் பங்காற்றியவர் அவர்.

சுவாமிநாதன் 11 வயதாக இருக்கும்போது அவரது தந்தை இறந்தார். அதையடுத்து மாமாவான



## " பட்டினி இல்லாத இந்தியா தான் என் கனவு "

MS Swaminathan
(1925-2023)





கதிரியக்க நிபுணர் எம்.கே.நாராயணசாமியால் வளர்க்கப்பட்டார்.

கும்பகோணம் கத்தோலிக் லிட்டில் பிளவர் உயர்நிலைப் பள்ளியில் அவர் படித்தார். பிறகு திருவனந்தபுரம் மஹாராஜா கல்லூரியில் விலங்கியலில் பி.எஸ்சி. முடித்தார் (1944).

அவரது குடும்பம், சுவாமிநாதன் மருத்துவராக வேண்டும் என்று விரும்பியது. ஆனால், 1943இல் வங்கப் பஞ்சத்தின் கொடுமைகளை அறிந்த சுவாமிநாதன், நாட்டின் உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன், விவசாய ஆராய்ச்சியை தனது துறையாகத் தேர்ந்தெடுத்தார்.

பிறகு மெட்ராஸ் வேளாண்மைக் கல்லூரியில் (தற்போதைய தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவை) சேர்ந்த சுவாமிநாதன்,



வேளாண்மையில் பி.எஸ்சி. பட்டம் பெற்றார். அதையடுத்து, தில்லியிலுள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தில் (IARI) மரபியல், விதைப் பெருக்கவியல் துறையில் முதுநிலை படிப்பு பயின்ற அவர், 1949-இல் உயிரணு மரபியலில் (Cytogenetics) பட்டம் பெற்றார். அப்போது இந்திய குடிமைப்பணித் தேர்வு எழுதி ஐபிஎஸ் பணிக்குத் தேர்வானபோதும், அதில் அவர் சேரவில்லை.

பிறகு ஐஏஆர்ஐ நிறுவனத்தில் மேற்கொண்ட ஆராய்ச்சியை நெதர்லாந்திலுள்ள வேகனிங்கன் பல்கலைக்கழகத்தில் யுனெஸ்கோ கூட்டுறவுடன் தொடர்ந்தார். அங்கு காட்டுவகை உருளைக்கிழங்குகளிலிருந்து சாகுபடிக்கான வீரிய உருளைக்கிழங்கை (Solanum tuberosum)



உருவாக்குவதற்கான மரபியல் படிநிலைகளைத் தரப்படுத்துதலில் வெற்றி பெற்றார்.

1950-இல் பிரிட்டனின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் தாவர விதைப் பெருக்க நிறுவனத்தில் முனைவர் பட்ட ஆராய்ச்சியில் ஈடுபட்டு, 1952-இல் பிஎச்.டி. பட்டம் பெற்றார். முனைவர் பட்டத்துக்குப் பிந்தைய ஆராய்ச்சி மேற்கொள்ள அமெரிக்காவின் விஸ்கான்சின் பல்கலைக்கழகம் சென்ற சுவாமிநாதன், அங்கு அமெரிக்க வேளாண் துறையில் உருளைக்கிழங்கு ஆராய்ச்சி மையத்தை நிறுவ உதவி செய்தார்.

அப்போது அமெரிக்காவிலேயே பேராசிரியர் பணி அளிப்பதாக அழைப்பு விடுக்கப்பட்டபோதும், அதை மறுத்து 1954-இல் நாடு திரும்பினார் சுவாமிநாதன். தில்லியிலுள்ள ஐஏஆர்ஐ அவரது புதிய களமானது.

அங்கு 1954 முதல் 1966 வரை, ஆசிரியர், ஆராய்ச்சியாளர், ஆய்வு நிர்வாகி ஆகிய பொறுப்புகளை வகித்த அவர், 1966 முதல் 1972 வரை அதன் இயக்குநராகப் பணி புரிந்தார். இதனிடையே கட்டாக்கிலுள்ள மத்திய அரிசி ஆராய்ச்சி நிலையத்திலும் அவர் 1954 முதல் 1972 வரை கூடுதலாகப் பணியாற்றினார்.



பசுமைப்புரட்சியின் பக்க விளைவுகளைச் சுட்டிக்காட்டி, சுவாமிநாதனைக் கடுமையாக விமர்சிப்பவர்களும் உண்டு. செயற்கை உரப் பயன்பாட்டால் மண் மலடாவதையும், மரபணு மாற்றப் பயிரினங்களால் உள்நாட்டு விதைகள் அழிவதையும் எதிர்ப்போர், சுவாமிநாதனைக் குற்றம் சாட்டுகின்றனர்.

1966-ல் பசுமைப்புரட்சிக்கான திட்டங்கள் தீட்டப்பட்டபோது எம்எஸ்.சுவாமிநாதன் அதில் இடம்பெற்று, திட்டத்தின் வெற்றிக்கு வேளாண் ஆராய்ச்சியைப் பயன்படுத்தினார். அதன் விளைவாக, 1971 முதல் 1977 வரை தேசிய வேளாண் ஆணைய உறுப்பினராகவும், 1972 முதல் 1979 வரை, இந்திய வேளாண் ஆராய்ச்சி கூட்டமைப்பின் (ICAR) தலைவராகவும் அவர் பொறுப்பு வகித்தார்.

சுவாமிநாதனின் நிர்வாகத் திறமை அவருக்கு பொறுப்பான அரசுப் பதவிகளை வகிக்கும் வாய்ப்பை ஏற்படுத்தியது. 1979-80-இல் மத்திய வேளாண் அமைச்சகத்தின் முதன்மைச் செயலாளராகவும், 1980-82-இல் மத்திய திட்டக்குழு உறுப்பினராகவும் அவர் பொறுப்பு வகித்தார். 1981-82-இல் தேசிய உயிரித் தொழில்நுட்ப வாரியத்தின் தலைவராகவும் அவர் இருந்தார்.

உலக அளவிலும் சுவாமிநாதனின் திறமை அங்கீகரிக்கப்படுகிறது. 1981-85-இல் அமெரிக்காவின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் (FAO) தலைவராகவும், 1982 முதல் 1988 வரை பிலிப்பைன்ஸில் உள்ள சர்வதேச அரிசி ஆராய்ச்சி நிலையத்தின் (IRRI) தலைமை இயக்குநராகவும் அவர் பொறுப்பேற்றிருந்தார். 1984-90-இல் சர்வதேச இயற்கைவளப் பாதுகாப்பு சங்கத்தின் தலைவராக அவர் செயல்பட்டார்.

இந்திய நாடாளுமன்ற மாநிலங்களவையின் நியமன உறுப்பினராகவும் (2007-13), தேசிய விவசாயிகள் நல ஆணையத்தின் தலைவராகவும் (2004-06), தேசிய வேளாண் அறிவியல் அகாதெமியின் தலைவராகவும் (1991-96, 2005-07) அவர் இருந்துள்ளார்.

``விவசாயக் கடன் தள்ளுபடியைத் தற்போது ஆதரிக்கிறேன். இலவச மின்சார மானியத்தை மிகவும் கவனமாகச் செயல்படுத்த வேண்டும். இலவச மின்சாரத்தை வைத்து பம்ப்செட்கள் மூலம் நிலத்தடி நீரை அதிகமாக உறிஞ்சுவதற்கு வாய்ப்புள்ளது. தேசிய விவசாயிகள் ஆணையத்தின் தலைவராக இருந்தபோது விவசாயிகளிடம் கலந்துரையாடினேன். அப்போது, அவர்கள் எல்லோரும் கூறிய ஒருமித்த கருத்து என்னவென்றால்... `இலவச மின்சாரம் வேண்டாம். நிலையான மற்றும் நம்பத்தகுந்த மின்சாரத்தை தினமும் வழங்க வேண்டும்' என்பதுதான்.''

பல்வேறு அரசுக் குழுக்களில் நிர்வாகியாகவும் பல கல்வி நிறுவனங்களின் உறுப்பினராகவும் உள்ள எம்.எஸ்.சுவாமிநாதனுக்கு, உலகம் முழுவதிலுமுள்ள பல்வேறு பல்கலைக்கழகங்கள் 70 கௌரவ முனைவர் பட்டங்களை அளித்துள்ளன.

ராமன் மகசேசே விருது (1971), உலக உணவு பரிசு (1987), யுனெஸ்கோ மகாத்மா காந்தி விருது (2000), இந்திரா காந்தி தேசிய ஒருமைப்பாட்டுக்கான விருது (2013), இந்திய அரசின் பத்மஸ்ரீ (1967), பத்மபூஷண் (1972), பத்மவிபூஷண் (1989) உள்ளிட்ட 40-க்கு மேற்பட்ட விருதுகளையும் கௌரவங்களையும் எம்.எஸ்.சுவாமிநாதன் பெற்றுள்ளார். சென்னையில் அவர் நிறுவிய எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை நிறுவனம், நீடித்த வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான பணிகளில் ஈடுபட்டு வருகிறது.

**- நா வீ சிவசங்கர்**

மறைந்த முன்னாள் முதலமைச்சர் எம்ஜிஆர் தோற்றுவித்து, மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா தலைவராக இருந்த அதிமுக கட்சி 52-வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. அதனை முன்னிட்டு சென்னை ராயப்பேட்டை தலைமை அலுவலகத்தில் 52-வது ஆண்டு தொடக்க விழா கொண்டாட்டம் நடைபெற்றது.

இந்த விழாவில் கலந்து கொள்ள பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி வருகை தந்தார். அவருக்கு பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர் அவர் தலைமை அலுவலகத்தில் உள்ள எம்.ஜி.ஆர் மற்றும் ஜெயலலிதா சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து மதுரையில் நடைபெற்ற அதிமுக மாநாட்டின் போது மரணம் அடைந்த 8 குடும்பத்தினருக்கு தலா 6 லட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கினார்.

பின்னர் அதிமுக பொறுப்பாளர்கள் கூட்டத்தில் அவர் பேசியதாவது:-

மாவட்ட பொறுப்பாளர்கள் தங்களுக்கான மாவட்டத்தில் பணிகளை மேற்பார்வையிடுங்கள். மாவட்டச் செயலாளர்கள் சொல்வதை அப்படியே ஏற்றுக் கொள்ளக் கூடாது. மாவட்டச்செயலாளர்கள் ஒத்துழைக்கவில்லையென்றால் உடனடியாக என்னை தொலைபேசியில் தொடர்புகொள்ளலாம்.

தேர்தல் பணிகளில் மாவட்ட செயலாளர்கள் தலையீடு இருந்தால் நேரடியாக புகாரளிக்கலாம். மாவட்ட செயலாளர்களுக்கு பயந்து அவர்கள் சொல்வதை கேட்டு நடக்காமல் கட்சிக்காக தேர்தல் பணிகளை தீவிரப்படுத்துங்கள். பொறுப்பாளர்களுடைய பணிகளையும் கட்சி தலைமை நிர்வாகிகள் கண்காணிப்பார்கள்.

ஒரு பூத்திற்கு 19 பேர் இருக்க வேண்டும். ஒரு தொகுதிக்கு தோராயமாக 2000 பூத்கள் வருகின்றன. 19 பேரில் இளைஞர் பாசறை இளம் பெண்கள் பாசறை மகளிர் அணிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். பூத் கமிட்டி அமைப்பதில் எந்த ஒரு பாரபட்சமும் பார்க்காமல் அனைவருக்கும் வாய்ப்பு கொடுக்க வேண்டும்.

நிறைய கட்சிகள் அதிமுகவுடன் கூட்டணிக்கு வர விருப்பம் தெரிவித்துள்ளன. பாஜகவுடன் இனி எந்தக் காலத்திலும் கூட்டணி இல்லை. பாஜகவுடன் கூட்டணி இல்லை என்பதை அழுத்தம் திருத்தமாக மக்களிடம் எடுத்து சொல்லுங்கள்."

இவ்வாறு அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி பேசினார்.

# பாஜகவுடன் இனி எப்போதும் கூட்டணி இல்லை என மக்களிடம் எடுத்து சொல்லுங்கள்:

## பொறுப்பாளர்கள் கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமி பேச்சு!



- V.சந்தோஷ்குமார்

# சென்னை போலீசாருக்கு முதல்அமைச்சரின் 10 கட்டளைகள்
# போலீஸ் கமிஷனர் சந்தீப்ராய் ரத்தோர் பேட்டி!

பொதுமக்களின் நலனை மையமாக வைத்து, சென்னை போலீசார் நிறைவேற்ற வேண்டிய முக்கியமான பணிகள் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 10 கட்டளைகள் பிறப்பித்துள்ளதாகவும், அவற்றை நிறைவேற்றி வருவதாகவும் போலீஸ் கமிஷனர் சந்தீப்ராய் ரத்தோர் தெரிவித்தார்.

**10 கட்டளைகள்**

சென்னை கோட்டையில் சமீபத்தில் நடந்த போலீஸ் அதிகாரிகள் மாநாட்டில் பொதுமக்களின் நலனை மையமாக வைத்து போலீசார் செயல்பட வேண்டும் என்று, பல்வேறு முக்கிய ஆலோசனைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

அதில் சென்னை போலீசார் நிறைவேற்ற வேண்டிய பணிகள் குறித்து 10 முக்கிய ஆலோசனைகளை அவர் தெரிவித்தார்.

1. சட்டம்-ஒழுங்கு பிரச்சினையை உயிர் மூச்சாக மனதில் வைத்து செயல்பட வேண்டும்.

2. பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் அமைதியை நிலை நாட்டுவதை இலக்காக வைத்திருக்க வேண்டும்.

3. அந்த பொது அமைதியை கெடுக்க நினைப்பவர்களை கண்டறிந்து, அவர்களின் செயல்பாட்டை தடுக்க வேண்டும்.

4. அமைதியான சென்னை நகரில், குழப்பம் ஏற்படுத்த முடியுமா, என்று திட்டமிட்டு செயல்படுபவர்களுக்கு இடம் அளித்து விடக்கூடாது. இதை தீவிரமாக கண்காணித்து தடுக்க வேண்டும்.

5. கள்ளச்சாராயம் மற்றும் கஞ்சா போன்ற போதைப்பொருட்களை அறவே சென்னை நகரில் இருந்து ஒழிக்க வேண்டும்.

**இரும்புக்கரம் கொண்டு..**

6. எதிர்கால தலைமுறையை சீரழிக்கும் போதைப்பொருள் கலாசாரத்தை சென்னையில் வளர விடக்கூடாது. இதில் தொடர்புள்ள குற்றவாளிகளை இரும்புக்கரம் கொண்டு அடக்க வேண்டும்.

7. சாலை விபத்துகளால் உயிர் இழப்பு ஏற்படுவது கவலை அளிப்பதாக உள்ளது. இந்த நிலை மாற வேண்டும்.



8. இந்தநிலை மாறுவதற்கு காவல்துறை, நெடுஞ்சாலைதுறை, போக்குவரத்து துறை ஆகியவை ஒருங்கிணைந்து திட்டங்களை வகுத்து, விபத்துகளை குறைப்பது குறித்து உரிய ஆய்வு செய்து, அவற்றை நிறைவேற்றுவதில் முழு முயற்சியில் ஈடுபடவேண்டும்.

**போக்குவரத்து நெரிசலை குறைக்க...**

9. சென்னையில் பொதுமக்களுக்கு சிரமம் தரக்கூடிய ஒன்றாக இருப்பது போக்குவரத்து நெரிசல். இதனை குறைப்பதற்கு ஒரு சிறப்பு செயல் திட்டத்தை உருவாக்கி, அதை விரைவாக செயல்படுத்த வேண்டும்.

10. பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களில் நடவடிக்கை எடுப்பதில் துளிகூட சமரசம் இருக்கக்கூடாது. இதில் தொடர்புள்ள குற்றவாளிகளை உடனே கைது செய்வதோடு, கோர்ட்டில் முறையாக வழக்கு தொடர்ந்து, அவர்களுக்கு தண்டனை பெற்று தருவதில் உறுதியாக செயல்பட வேண்டும்.

**போலீஸ் கமிஷனர் பேட்டி**

முதலமைச்சரின் இந்த முக்கியமான 10 ஆலோசனைகளை, 10 கட்டளைகளாக மனதில் கொண்டு அவற்றை நிறைவேற்றுவதில் அதிரடி நடவடிக்கைகளில் உறுதியோடு ஈடுபடுவதாக போலீஸ் கமிஷனர் சந்தீப்ராய்ரத்தோர் தெரிவித்தார்.

**இது தொடர்பாக அவர் அளித்த பேட்டி வருமாறு:-**

முதலமைச்சரின் 10 கட்டளைகளில் முதன்மையானது சட்டம்-ஒழுங்கு பிரச்சினை. இதில் உறுதியான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இரவு-பகல் பாராமல் என்னோடு தோள் கொடுத்து சக அதிகாரிகள் பணியாற்றி வருகிறார்கள்.

கூடுதல் கமிஷனர்கள் பிரேம் ஆனந்த் சின்கா, அஷ்ரா கார்க் ஆகியோர் சட்டம்-ஒழுங்கு பிரச்சினையை கையாள்வதில் தலைசிறந்த அதிகாரிகள்.

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி, சுதந்திரதினவிழா, விநாயகர் சதுர்த்தி ஊர்வலம், திருப்பதி குடை ஊர்வலம் மற்றும் சமீபத்தில் நடந்த இந்தியா-ஆஸ்திரேலியா உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி எவ்வித அசம்பாவிதமும் இன்றி அமைதியாக நடந்து முடிந்தது. சட்டம்-ஒழுங்கு பேணி காக்கப்பட்டதற்கு இது போன்ற நிகழ்வுகள்தான் சிறந்த உதாரணம். கூடுதல் கமிஷனர் சுதாகர் தலைமையில் போக்குவரத்து மேலாண்மையும் மேற்கண்ட நிகழ்வுகளில் சிறப்பாக கையாளப்பட்டது.

**ரவுடிகள் ஒழிப்பு**

ரவுடிகள் ஒழிப்பில் தயவு தாட்சண்யம் இல்லாமல் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரை முக்கிய ரவுடிகள் உள்ளிட்ட கொடுங்குற்றவாளிகள் 452 பேர் குண்டர் சட்டத்தில் சிறையில் தள்ளப்பட்டுள்ளனர்.

வாரந்தோறும் 10 குற்றவாளிகளுக்கு குறையாமல் குண்டர் சட்டத்தில் சிறையில் அடைக்கப்படுகிறார்கள். கடந்த 3 மாதங்களில் மட்டும் 112 பேர் மீது குண்டர் சட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

நிலுவையில் உள்ள முக்கியமான வழக்குகளில் குற்றவாளிகளை கைது செய்ய 12 காவல் மாவட்டங்களிலும் அந்தந்த துணை கமிஷனர்கள் தலைமையில் 12 சிறப்பு புலனாய்வு பிரிவுகள் தொடங்கப்பட்டு உள்ளது. அந்த வகையில் இந்த சிறப்பு புலன் விசாரணை குழுக்கள் தொடங்கப்பட்ட பிறகு 2,524 முக்கிய குற்ற வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு உள்ளன.

**போதைப்பொருள் ஒழிப்பு**

கஞ்சா போன்ற போதைப்பொருள் ஒழிப்பிலும் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறோம். இந்த ஆண்டு இதுவரையில் 742 போதைப்பொருள் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 1,140 போதைப்பொருள் கடத்தல் மற்றும் விற்பனை குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு உள்ளனர்.

2,250 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டு உள்ளது. கஞ்சா சாக்லெட்டுகள், கஞ்சா கேக்குகள், கஞ்சா அல்வா போன்ற புதிய வகை போதைப்பொருட்களும் பறிமுதல் ஆகி உள்ளது.

12,442 போதை மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டு உள்ளது. 56 குற்றவாளிகள் மீது குண்டர் சட்டம் பாய்ந்துள்ளது. 87 வாகனங்கள் பறிமுதலாகி உள்ளது.

**சொத்துகள் பறிமுதல்**

கடந்த 2021-ம் ஆண்டில் இருந்து இதுவரை போதைப்பொருள் சம்பந்தப்பட்ட 797 வழக்குகளில் கைதான 1,749 குற்றவாளிகளின் சொத்துகள் மற்றும் வங்கிகணக்குகள் விவரம் சேகரிக்கப்பட்டது. சட்டரீதியாக அவற்றை முடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதில் 853 வங்கி கணக்குகள் முடக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பிரசாரங்களும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. சமீபத்தில் ஆவடியில் இது தொடர்பான விழிப்புணர்வு இரவு மாரத்தான் போட்டி நடத்தப்பட்டது. இதில் பள்ளி, கல்லூரி மாணவ-மாணவிகள் மற்றும் வெளிமாநில, வெளிநாட்டினர் சுமார் 6 ஆயிரம் பேர் கலந்து கொண்டனர். இதில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

மேலும் இதன் மூலம் வசூலான 4.74 லட்சம் ரூபாய், குழந்தைகள் பாதுகாப்பு நல நிதியாக, எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனைக்கு வழங்கப்பட்டது.

**பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாம்கள்**

முதலமைச்சரின் ஆணைப்படி பொதுமக்கள் குறைதீர்க்கும் மெகா முகாம்கள் மாதத்தில் ஒரு நாள் சென்னையில் 12 காவல் மாவட்டங்களிலும் நடத்தப்படுகிறது. இதில் ஏதாவது ஒரு முகாமில் நானே கலந்து கொண்டு பொது மக்களிடம் குறை கேட்டு மனுக்கள் வாங்கி வருகிறேன். இதில் வாங்கப்படும் மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கடந்த 2 முறை இதில் வாங்கப்பட்ட 1,841 மனுக்களில் 1,539 மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு தீர்வு காணப்பட்டுள்ளது. இது தவிர எனது அலுவலகத்தில் தினமும் காலை 10 மணி முதல், இரவு 7 மணி வரை பொதுமக்களிடம் மனுக்கள் வாங்கப்படுகிறது. புதன்கிழமைதோறும் எனது அலுவலகத்தில் நானும் நேரில் பொதுமக்களை சந்தித்து குறைகளை கேட்டு மனுக்கள் வாங்குகிறேன். கடந்த 7 புதன்கிழமைகளில் வாங்கப்பட்ட 103 மனுக்களில் 60 மனுக்கள் மீது தீர்வு காணப்பட்டுள்ளது. மீதி 43 மனுக்கள் மீது விசாரணை நடக்கிறது. போலீசாரிடமும் இதுபோல் மனுக்கள் பெறப்பட்டு, தீர்வு காணப்படுகிறது.

**முதியோர்கள் குறைகள்**

78 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்களின் குறைகளை தீர்த்து வைப்பதில் புதிய அணுகுமுறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களிடம் பெறப்படும் மனுக்கள் மீது துணை கமிஷனர் அந்தஸ்திலான அதிகாரிகளை நேரில் அனுப்பி உரிய

விசாரணை நடத்தி, உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

சமீபத்தில் அதுபோல பெறப்பட்ட 8 மூத்த குடிமக்களின் மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.தொடர்ந்து இதற்கு முன்னுரிமை கொடுத்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**போக்குவரத்து நெரிசலை சீர்செய்ய...**

முதலமைச்சரின் ஆணைக்கிணங்க போக்கு வரத்து நெரிசலை சீர் செய்ய உரிய நடவடிக்கை எடுத்து வருகிறோம்.10 முக்கிய சாலைகளில் ஏற்படும் நெரிசலை சரி செய்ய கூடுதல் போலீசார் மற்றும் ஊர்க்காவல் படையினரை பணி அமர்த்தி உள்ளோம். ஸ்பென்சர் சந்திப்பு, நந்தனம் சந்திப்பு மற்றும் பட் டுலாஸ் சாலை சந்திப்பில் போக்குவரத்து மாற்றங்கள் மூலம் நெரிசலை சீர்செய்ய வழிவகை காணப்பட்டு உள்ளது. எதிர்காலத்தில் நுண்ணறிவு போக்குவரத்து முறை, நவீன சாலை வளர்ச்சி திட்டம், வட சென்னையில் பிரத்யேகமாக நவீன போக்குவரத்து மற்றும் விதிமீறல் கண்காணிப்பு திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

மேலும் மாநகர பஸ்களின் டிரைவர்களிடம் விழிப்புணர்வு பிரசாரம் மூலம் பஸ் நிறுத்தங்களில் பஸ்களை நிறுத்தி பயணிகளை ஏற்றிச்செல்ல அறிவுரை வழங்கப்பட்டது. பஸ் நிறுத்தங்களில் ஆட்டோக்களை நிறுத்தி ஆக்கிரமிப்பு செய்வதை தடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் சாலைகளில் வாகனங்களை நிறுத்தி ஆக்கிரமிப்பு செய்து போக்குவரத்து நெரிசலை ஏற்படுத்தியவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**டிரோன்கள் மூலம் கண்காணிப்பு**

கூகுள் வரைபட நேரடி கண்காணிப்பு அமைப்பு உருவாக்கப்பட்டு உள்ளது. இதன் மூலம் போக்குவரத்து நெரிசல் ஏற்படும் பகுதிகளை கண்டறிந்து, உடனுக்குடன் உரிய அதிகாரிகளை சம்பந்தப்பட்ட இடங்களுக்கு உடனடியாக அனுப்பி வைத்து, நெரிசல் சரி செய்யப்பட்டு வருகிறது. இதற்கு டிரோன்களும் பயன்படுத்தப்பட உள்ளது. இதுபோன்ற நடவடிக்கைகள் மூலம் முதலமைச்சரின் 10 முக்கிய கட்டளைகளை நிறைவேற்றி வருகிறோம். இந்த நடவடிக்கைகள் தொடரும்.

இவ்வாறு அவர் கூறினார்.

**பெண்களுக்கான பாதுகாப்பில், சென்னை முதலிடத்தில் உள்ளது**

பெண்களுக்கான பாதுகாப்பில் இந்தியாவிலேயே சென்னை முதலிடத்தை பிடித்துள்ளது, என்று கமிஷனர் சந்தீப்ராய் ரத்தோர் பெருமிதத்துடன் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

முதலமைச்சரின் 10 கட்டளைகளில் 10-வது கட்டளை பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு சம்பந்தப்பட்டது. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபடுவோர் மீது உடனுக்குடன் கடும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதற்காக உருவாக்கி உள்ள காவலர் உதவி செயலியை இதுவரையில் 52,262 பேர் தங்களது செல்போனில் பதவிறக்கம் செய்துள்ளனர். இச்செயலி மூலம் 1,397 அழைப்புகள் பெறப்பட்டு, உடனுக்குடன் நேரில் சென்று நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

நிர்பயா திட்டத்தின் கீழ் பள்ளி, கல்லூரி மாணவிகள் மற்றும் வேலைக்கு செல்லும் பெண்கள் என 50 ஆயிரம் பேருக்கு, தற்காப்பு கலைகள் மற்றும் பாதுகாப்பு விழிப்புணர்வு பயிற்சி அளிக்கப்பட்டு உள்ளது. இந்த ஆண்டு இதுவரை போக்சோ சட்டப்பிரிவின் கீழ் 243 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 192 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு உள்ளனர். இவற்றில் 35 வழக்குகளில் குற்றவாளிகளுக்கு நீதிமன்றம் மூலம் உரிய தண்டனை பெற்று தரப்பட்டுள்ளது.

சிறார் பாதுகாப்பு பிரிவினர் 125 பிச்சை எடுத்த சிறுவர்களை மீட்டுள்ளனர். குழந்தைகள் கடத்தல் தடுப்பு பிரிவினர், காணாமல் போன 339 குழந்தைகளை இதுவரை மீட்டுள்ளனர். பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு பிரிவு தொடர்ந்து சிறப்பாக செயல்பட கவனம் செலுத்தி வருகிறோம்.

இவ்வாறு கமிஷனர் கூறினார்.

**- ம.திலிப்குமார்**



**இனி சிங்கம், புலிக்கும் அறுவை சிகிச்சை!**

**வண்டலூர் உயிரியல் பூங்காவில் வன விலங்குகளுக்கு அறுவை சிகிச்சை செய்யும் வகையில் 35 லட்சம் ரூபாயில் ஆபரேஷன் தியேட்டர் அமைக்கப்பட்டுள்ளது. இதில் புலி, சிங்கம் போன்ற விலங்குகளுக்கும் அறுவை சிகிச்சை செய்ய முடியும்.**

# 100 பதக்கங்கள் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவுக்கு ஒரு மகத்தான சாதனை: பிரதமர்

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் நமது விளையாட்டு வீரர்கள் 100 பதக்கங்கள் என்ற மைல்கல்லைத் தாண்டியுள்ளதால் நாடு மகிழ்ச்சி அடைந்துள்ளது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறினார்.

அக்டோபர் 10-ம் தேதி பிரதமர் இந்த விளையாட்டு போட்டிக் குழுவினருடன் பிரதமர் கலந்துரையாடுகிறார்.

இது தொடர்பாக பிரதமர் திரு நரேந்திர மோடி எக்ஸ் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவு:-

“ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியாவுக்கு கிடைத்த மகத்தான சாதனை!

100 பதக்கங்கள் என்ற குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியதில் இந்திய மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இந்தியாவுக்கான இந்த வரலாற்று மைல்கல்லை எட்டிய நமது தனித்துவமான விளையாட்டு வீரர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.




ஒவ்வொரு பிரமிப்பூட்டும் செயல்பாடும் வரலாறு படைத்து நம் இதயங்களை பெருமையால் நிரப்பியுள்ளது.

நமது ஆசிய விளையாட்டுப் போட்டிக் குழிவினர் மற்றும் வீரர்களுடன் வரும் 10ம் தேதி கலந்துரையாட நான் ஆவலாக உள்ளேன்”.


## Advertisement Tariff

| | | |
|---|---|---|
| Full Page Color Back Wrapper | : | ₹ 10,000/- |
| Full Page Color Inner Wrapper | : | ₹ 8,000/- |
| Half Page Color Wrapper | : | ₹ 5,000/- |
| Full Page Black & White | : | ₹ 5,000/- |
| Half Page Black & White | : | ₹ 2,000/- |
| **Annual Subscription** | : | ₹ 240/- |

Administrative Office:

**PENA KURAL**
**3/885, Pillaiyar Kovil Street, Mettukuppam,**
**OMR, Chennai, Tamil Nadu, India - 600097.**
**Ph: 044-35906002, 9962245338**
**Email: penakural@yahoo.com**

PENA KURAL TAMIL MONTHLY

UPI Number:
9962245338

# ஜி-20

# பல்கலைக்கழக இணைப்பு நிறைவு நிகழ்ச்சியில் பிரதமர் நிகழ்த்திய உரை





நாட்டின் பல்வேறு பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள், பேராசிரியர்கள், பல்வேறு கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் எனது இளம் நண்பர்களே! இன்று பாரத் மண்டபத்தில் இருப்பதை விட அதிகமானோர் இணையதளத்தில் மூலம் இணைந்துள்ளனர். ஜி-20 பல்கலைக்கழக இணைப்பு கனெக்ட் என்ற இந்த நிகழ்ச்சிக்கு அனைவரையும் வரவேற்கிறேன். அனைத்து இளைஞர்களையும் வாழ்த்துகிறேன்.

நண்பர்களே,

இரண்டு வாரங்களுக்கு முன்பு இதே பாரத் மண்டபத்தில் நிறைய நிகழ்ச்சிகள் நடந்தன. இன்று வருங்கால பாரதம் இதே பாரத் மண்டபத்தில் கூடி யிருப்பதைக் காண நான் மகிழ்ச்சியடைகிறேன்.

நண்பர்களே,

ஒவ்வொருவரின் இதயமும் துடித்துக் கொண்டிருந்த ஆகஸ்ட் 23-ம் தேதியை நீங்கள் அனைவரும் தெளிவாக நினைவில் வைத்திருக்கிறீர்கள். திடீரென்று அனைவரின் முகமும் ஒளிர்ந்தது. ‘இந்தியா சந்திரனில் உள்ளது’ என்ற பாரதத்தின் குரலை உலகமே கேட்டது. ஆகஸ்ட் 23 தேசிய விண்வெளி தினம் என்பது நம் நாட்டில் நிரந்தரமாகிவிட்டது.

நண்பர்களே,

கடந்த 30 நாட்களில் இந்தியாவின் ராஜீய நடவடிக்கைகள் புதிய உச்சத்தை எட்டியுள்ளன. ஜி-20 மாநாட்டிற்கு முன், பிரிக்ஸ் மாநாடு தென்னாப்பிரிக்காவில் நடைபெற்றது. இந்தியாவின் முயற்சியால் 6 புதிய நாடுகள் பிரிக்ஸ் அமைப்பில் இணைந்துள்ளன. தென்னாப்பிரிக்காவைத் தொடர்ந்து, நான் கிரேக்கத்திற்குச் சென்றேன். கடந்த 40 ஆண்டுகளில் இந்தியப் பிரதமர் ஒருவர் அங்கு செல்வது இதுவே முதல் முறையாகும். ஜி-20 உச்சி மாநாட்டிற்கு சற்று முன், இந்தோனேசியாவில் பல உலகத் தலைவர்களையும் நான் சந்தித்தேன். அதைத் தொடர்ந்து, ஜி-20 மாநாட்டில் இதே பாரத் மண்டபத்தில் உலகிற்கான முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

நண்பர்களே,

இன்றைய சர்வதேச சூழலில், பல நாடுகளை ஒரே மேடையில் ஒன்றிணைப்பது சிறிய காரியம் அல்ல. நமது புது தில்லி பிரகடனம் நூறு சதவீத உடன்பாட்டுடன் ஒரு சர்வதேச தலைப்புச் செய்தியாக மாறியுள்ளது. இந்தியாவின் முன்முயற்சியால் ஆப்பிரிக்க யூனியன் ஜி-20 அமைப்பில் நிரந்தர உறுப்பினராக இடம் பெற்றது. ஜி-20 உச்சி மாநாட்டிலேயே, இந்தியா-மத்திய கிழக்கு-ஐரோப்பா வழித்தடத்தில் உருவாக்க முடிவு செய்துள்ளோம்.

இந்த வழித்தடம் பல கண்டங்களை இணைக்கும். இது வரும் நூற்றாண்டுகளுக்கு வர்த்தகம் மற்றும் சுற்றுலாவை மேம்படுத்தும்.

நண்பர்களே,

ஜி-20 மாநாடு முடிந்ததும், சவுதி அரேபியாவின் பட்டத்து இளவரசர் தனது அரசுமுறைப் பயணத்தை தில்லியில் தொடங்கினார். சவூதி அரேபியா இந்தியாவில் 100 பில்லியன் டாலர்களை முதலீடு செய்ய உள்ளது. இவை அனைத்தும் கடந்த 30 நாட்களில் நடந்துள்ளன. கடந்த 30 நாட்களில் மட்டும், இந்தியப் பிரதமர் என்ற முறையில், மொத்தம் 85 உலகத் தலைவர்களை நான் சந்தித்துள்ளேன். இது ஏறத்தாழ பாதி உலக நாடுகளின் எண்ணிக்கையாகும். பிற நாடுகளுடனான பாரதத்தின் உறவு நன்றாக இருக்கும்போது, புதிய வாய்ப்புகள் உருவாக்கப்படுகின்றன.

நண்பர்களே,

கடந்த 30 நாட்களில், எஸ்.சி-எஸ்.டி-ஓ.பி.சி, ஏழை மற்றும் நடுத்தர வர்க்கத்தினருக்கு அதிகாரமளிக்க பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. செப்டம்பர் 17 அன்று விஸ்வகர்மா ஜெயந்தி அன்று, பிரதமரின் விஸ்வகர்மா திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டம் நமது கைவினைஞர்களுக்கானது. வேலைவாய்ப்புத் திருவிழாக்களை ஏற்பாடு செய்ததன் மூலம், கடந்த 30 நாட்களில் 1 லட்சத்துக்கும் அதிகமான இளைஞர்களுக்கு மத்திய அரசுத் துறைகளில் அரசு வேலை வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தொடங்கியதில் இருந்து இதுவரை 6 லட்சத்துக்கும் அதிகமான இளைஞர்களுக்குப் பணி நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த 30 நாட்களில், நாடாளுமன்ற கூட்டத்தொடரை புதிய நாடாளுமன்ற கட்டிடத்தில் நடத்தப்பட்டுள்ளது. நாட்டின் புதிய நாடாளுமன்ற கட்டிடத்தில் முதல் மசோதாவாக நிறைவேற்றப்பட்ட மகளிர் இடஒதுக்கீட்டு மசோதாவின் மூலம் பெண்கள் தலைமையிலான வளர்ச்சியின் முக்கியத்துவத்தை நாடாளுமன்றம் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டது.

நண்பர்களே,

கடந்த 30 நாட்களில், நாட்டில் மின்சார போக்குவரத்தை விரிவுபடுத்த மற்றொரு முக்கிய முடிவு எடுக்கப்பட்டது. மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்புகளை வலுப்படுத்துவதற்கான ஒரு முக்கியமான திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. சில நாட்களுக்கு முன்பு, துவாரகாவில் உள்ள யசோபூமி சர்வதேச மாநாட்டு மையத்தை நாட்டுக்கு அர்ப்பணித்தோம். இளைஞர்களுக்கு விளையாட்டில் அதிக வாய்ப்புகளை வழங்குவதற்காக வாரணாசியில் சர்வதேச கிரிக்கெட் மைதானத்திற்கு நான் அடிக்கல் நாட்டியுள்ளேன். இரண்டு நாட்களுக்கு முன், 9 வந்தே பாரத் ரயில்களைக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தேன்.

இந்த 30 நாட்களில், பெட்ரோகெமிக்கல் துறையில் இந்தியாவின் தற்சார்பை அதிகரிக்க மற்றொரு முக்கிய நடவடிக்கையை எடுத்துள்ளோம். மத்தியப் பிரதேசத்தில் உள்ள சுத்திகரிப்பு நிலையத்தில் பெட்ரோ ரசாயனம் வளாகத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. மத்தியப் பிரதேசத்தில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, தகவல் தொழில்நுட்பப் பூங்கா, மெகா தொழில் பூங்கா மற்றும் 6 புதிய தொழில்துறை பகுதிகளில் பணிகள் தொடங்கியுள்ளன. நான் பட்டியலிட்டுள்ள இந்தத் திட்டங்கள் அனைத்தும் இளைஞர்களின் திறன்கள் மற்றும் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கம் ஆகியவற்றுடன் நேரடியாகத் தொடர்புடையவை. இந்த பட்டியல் மிகவும் நீளமானவை.

நண்பர்களே,

நம்பிக்கையும், வாய்ப்புகளும், வெளிப்படைத் தன்மையும் இருந்தால் மட்டுமே இளைஞர்கள் முன்னேற முடியும். பெரிதாக சிந்தியுங்கள். உங்களால் சாதிக்க முடியாதது எதுவுமில்லை. எந்த வாய்ப்பையும் சாதாரணமாக எடுத்துக் கொள்ள வேண்டாம். மாறாக, அந்த வாய்ப்பை ஒரு புதிய அளவுகோலாக மாற்ற சிந்தியுங்கள்.

60 நகரங்களில் 200-க்கும் மேற்பட்ட ஜி-20 தொடர்பான நிகழ்ச்சிகள் நடைபெற்றன. 1.5 கோடிக்கும் அதிகமான மக்கள் ஜி -20 நடவடிக்கைகளில் பங்களித்தனர். பல்கலைக்கழக இணைப்புத் திட்டத்தின் மூலம் 100 க்கும் அதிகமான பல்கலைக்கழகங்கள் மற்றும் 1 லட்சம் மாணவர்கள் ஜி -20 நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர்.

நண்பர்களே,

இன்று பாரதம் அதன் அமிர்த காலத்தில் இருக்கிறது. வரும் 2047-ம் ஆண்டு நாடு சுதந்திரம் அடைந்து 100 ஆண்டுகள் நிறைவடைகிறது. அது

நமக்கு ஒரு வரலாற்று தருணமாக இருக்கும். 2047 வரையிலான காலகட்டம் உங்களைப் போன்ற இளைஞர்கள் எதிர்காலத்தைக் கட்டமைக்கும் காலம். அதாவது அடுத்த 25 ஆண்டுகள் நாட்டுக்கு எவ்வளவு முக்கியமோ, அதே அளவுக்கு உங்கள் வாழ்க்கையிலும் முக்கியமானது. எனவே, நாட்டின் வளர்ச்சிக்கான பல காரணிகள் ஒன்றிணைந்த காலகட்டம் இது. இது போன்ற காலகட்டம் வரலாற்றில் இதற்கு முன் வந்ததில்லை. இந்தியா மிகக் குறுகிய காலத்தில், 10 வது பெரிய பொருளாதாரத்திலிருந்து 5 வது பெரிய பொருளாதாரமாக மாறியுள்ளது. இன்று பாரதத்தின் மீதான உலகின் நம்பிக்கை மிக அதிகமாக உள்ளது,

நண்பர்களே,

உங்களைப் போன்ற இளைஞர்களுக்கு வாய்ப்புகள் நிறைந்த காலகட்டம் இது. 2020 ஆம் ஆண்டுக்குப் பிறகு, சுமார் 5 கோடி பேர் ஊழியர் வருங்கால வைப்புநிதி அமைப்பின் சம்பளப் பட்டியலில் இணைந்துள்ளனர். இவர்களில் சுமார் 3.5 கோடி பேர் முதல் முறையாக இபிஎஃப்ஓ வரம்புக்குள் வந்து முதன்முறையாக முறையான வேலைகளைப் பெற்றுள்ளனர். அதாவது உங்களைப் போன்ற இளைஞர்களுக்கு முறையான வேலை வாய்ப்புகள் இந்தியாவில் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன.

2014-ம் ஆண்டுக்கு முன்பு வரை நம் நாட்டில் 100-க்கும் குறைவான ஸ்டார்ட்அப் நிறுவனங்கள்தான் இருந்தன. இன்று அவற்றின் எண்ணிக்கை ஒரு லட்சத்தை தாண்டியுள்ளது. ஸ்டார்ட் அப் நிறுவனங்களின் இந்த அலை பலருக்கு வேலை வாய்ப்பை அளித்துள்ளது. இன்று பாரதம் உலகின் இரண்டாவது பெரிய மொபைல் உற்பத்தியாளராக மாறியுள்ளது. இன்று நாம் மொபைல் போன்களை ஏற்றுமதி செய்பவர்களாக மாறிவிட்டோம். இதன் விளைவாக, ஏராளமான வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. கடந்த சில ஆண்டுகளில் பாதுகாப்புத் தளவாட உற்பத்தித் துறையில் மிகப்பெரிய வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. 2014-ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ராணுவத் தளவாடங்களின் ஏற்றுமதி 23 மடங்கு அதிகரித்துள்ளது.

நண்பர்களே,

அரசியல் நிலைத்தன்மை, கொள்கைத் தெளிவு மற்றும் நமது ஜனநாயக விழுமியங்கள் காரண மாகவே இவை அனைத்தும் இந்தியாவில் நடக்கின்றன. கடந்த 9 ஆண்டுகளில் ஊழலைக் கட்டுப்படுத்த நேர்மையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உங்களைப் போன்ற மாணவர்களில் பெரும்பாலோர் 2014 ஆம் ஆண்டில் 10, 12 அல்லது 14 வயதுடையவர்களாக இருந்திருப்பீர்கள். ஊழல் நாட்டை எப்படி சீரழித்தது என்பது தொடர்பான செய்தித்தாள்களின் தலைப்புச் செய்திகளை நீங்கள் அப்போது அறிந்திருக்க மாட்டீர்கள்.

நண்பர்களே,

இடைத்தரகர்களையும் பலன்கள் உரியவர்களை சென்றடையாததையும் தடுக்க புதிய தொழில்நுட்ப அடிப்படையிலான அமைப்புகளை உருவாக்கியுள்ளோம் என்பதை இன்று நான் பெருமிதத்துடன் கூற முடியும். பல சீர்திருத்தங்களைக் கொண்டுவந்து, இடைத்தரகர்களை நடைமுறையில் இருந்து அகற்றுவதன் மூலம் வெளிப்படையான அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. நேர்மையற்ற வர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். நேர்மைக்கு வெகுமதி அளிக்கப்படுகிறது.

நண்பர்களே,

வளர்ச்சிப் பயணத்தைத் தொடர, தூய்மையான, தெளிவான, நிலையான ஆட்சி மிகவும் முக்கியம். நீங்கள் உறுதியாக இருந்தால், 2047 க்குள் வளர்ந்த, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் தற்சார்புள்ள நாடாக இந்தியா மாறுவதை யாராலும் தடுக்க முடியாது.

நண்பர்களே,

இன்னொரு விஷயத்தையும் நாம் மனதில் கொள்ள வேண்டும். நீங்கள் சிறப்பாக செயல்படுவீர்கள் என்று பாரதம் மட்டும் எதிர்பார்க்கவில்லை. உலகமே உங்கள் மீது நம்பிக்கை வைத்துள்ளது. பாரதத்தையும் அதன் இளைஞர்களின் திறமை மற்றும் செயல்திறனையும் உலகம் அறிந்துள்ளது.

பாரதத்தின் முன்னேற்றமும், பாரத இளைஞர்களின் முன்னேற்றமும் உலக முன்னேற்றத்திற்கு மிகவும் இன்றியமையாதது. பாரதத்தின் இளைஞர்களே எனது உண்மையான பலம். என் முழு பலமும் அதில் தான் இருக்கிறது . உங்கள் சிறந்த எதிர்காலத்திற்காக இரவும் பகலும் தொடர்ந்து உழைப்பேன் என்று நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன்.

நண்பர்களே,

எனக்கும் உங்களிடம் எதிர்பார்ப்பு இருக்கிறது. இன்று நானும் உங்களிடம் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். நீங்கள் வருத்தப்பட மாட்டீர்கள், இல்லையா? உங்களைப் போன்ற இளைஞர்களிடம்

கேட்பதற்காக நீங்கள் ஆச்சரியப்படப் போகிறீர்களா? நண்பர்களே, நான் தேர்தலில் என்னை வெற்றிபெற செய்யச் சொல்லவில்லை. நண்பர்களே, நான் உங்களை என் கட்சியில் சேரச் சொல்ல மாட்டேன்.

நண்பர்களே,

எனக்கு தனிப்பட்ட செயல் திட்டம் எதுவும் இல்லை. எல்லாம் நாட்டுக்கானது. இன்று உங்களிடம் சிலவற்றைக் கேட்கிறேன். நாட்டுக்காக நான் அதைக் கோருகிறேன். தூய்மை இந்தியா திட்டத்தை வெற்றி பெறச் செய்ததில் இளைஞர்களாகிய நீங்கள் பெரும் பங்காற்றியிருக்கின்றீர்கள். ஆனால் தூய்மை என்பது ஒன்றிரண்டு நாள் நிகழ்வு அல்ல. இது ஒரு தொடர்ச்சியான செயல்முறையாகும். இதை நாம் பழக்கமாக்கிக் கொள்ள வேண்டும். எனவே, அக்டோபர் 1 ஆம் தேதி நாடு முழுவதும் தூய்மை தொடர்பான ஒரு முக்கிய நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட உள்ளது. இதில் இளம் நண்பர்கள் அனைவரும் ஆர்வமுடன் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

எனது இரண்டாவது கோரிக்கை யுபிஐ தொடர்பான டிஜிட்டல் பரிவர்த்தனைகள் தொடர்பானது. இன்று உலகமே டிஜிட்டல் பாரத் மற்றும் யுபிஐ-யை வெகுவாகப் பாராட்டுகிறது. இந்தப் பெருமையும் உங்களுடையதுதான். இளம் நண்பர்களான நீங்கள் அனைவரும் அதை விரைவாக ஏற்றுக்கொண்டு, செயல்படுத்தினீர்கள். இப்போது அதை விரிவுபடுத்தி ஒரு புதிய திசையைக் கொடுக்கும் பொறுப்பை என் இளைஞர்கள் சுமக்க வேண்டும். யுபிஐ பரிவர்த்தனை தொடர்பாக வாரத்திற்குக் குறைந்தது ஏழு பேருக்கு நீங்கள் கற்றுக் கொடுக்க வேண்டும்.

நண்பர்களே,

உங்களிடம் எனது மூன்றாவது வேண்டுகோள் உள்ளூர் பொருட்களை ஆதரிப்பதாகும். நண்பர்களே, உங்களால் மட்டுமே இதை முன்னெடுத்துச் செல்ல முடியும். இது பண்டிகைகளின் காலம். பண்டிகைகளின் போது அன்பளிப்பு நோக்கத்திற்காக நீங்கள் எதை வாங்கினாலும் அது இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்டது என்பதை உறுதிப்படுத்த முயற்சிக்க வேண்டும். நம் நாட்டில் தயாரிக்கப்பட்ட பொருட்களை வாங்கத் தொடங்கினால், கற்பனை செய்ய முடியாத வேகத்தில் நமது தொழில் மற்றும் வர்த்தகம் வளரும்! ஒரு சிறிய அடி கூட பெரிய கனவுகளை நிறைவேற்றும்.

நண்பர்களே,

நமது வளாகங்கள் கல்வியின் மையங்கள் மட்டுமல்ல. கல்லூரி மற்றும் பல்கலைக்கழக வளாகங்களில் பல கலாச்சார நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. அங்கு, கதர் தொடர்பான ஆடை அலங்காரமான அணிவகுப்புகளை நடத்தலாம்.

நமது விஸ்வகர்மா நண்பர்கள், பழங்குடி நண்பர்களின் கைவினைப்பொருட்களை காட்சிப்படுத்தலாம். இதுதான் பாரதத்தை தன்னிறைவு அடையச் செய்யவும், பாரதத்தை வளர்ச்சியடையச் செய்யவும் வழி. இந்த வழியைப் பின்பற்றுவதன் மூலம், ஏராளமான வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியும்.

என் இளம் நண்பர்களே,

நமது இளைஞர்களும், புதிய தலைமுறையினரும் உறுதியுடன் செயல்பட்டால், நிச்சயம் எதிர்பார்த்த பலன் கிடைக்கும். இந்த உறுதிமொழியுடன் நீங்கள் இன்று பாரத் மண்டபத்தை விட்டு வெளியேறுவீர்கள் என்று நான் நம்புகிறேன்.

நண்பர்களே,

தற்சார்பு பாரதம் சுயமரியாதையை புதிய உயரத்திற்குக் கொண்டு செல்லும். அந்தத் தீர்மானத்தை முன்னெடுத்துச் செல்வோம். வளர்ந்த பாரதம் என்ற தீர்மானத்தை நாம் அனைவரும் ஒன்றிணைந்து நிறைவேற்றுவோம். நாம் 2047 க்குள் இந்தியா ஒரு வளர்ந்த நாடாக இருக்க வேண்டும். 25 ஆண்டுகளுக்குப் பிறகு நீங்கள் எங்கிருந்தாலும், உங்கள் வாழ்க்கையில் மிக உயர்ந்த கட்டத்தில் இருப்பீர்கள்.

நண்பர்களே,

உங்கள் கனவுகள் நனவாவதை யாராலும் தடுக்க முடியாது. இந்தியாவை உலகின் முதல் மூன்று பொருளாதாரங்களுக்குக் கொண்டு செல்வேன் என்று நான் உங்களுக்கு உத்தரவாதம் அளிக்கிறேன். அதற்கு உங்கள் ஆதரவு எனக்கு வேண்டும்.

என்னுடன் சொல்லுங்கள் - பாரத் மாதா கி - ஜேய், உங்கள் முழு பலத்துடன் சொல்லுங்கள் நண்பர்களே - பாரத் மாதா கி - ஜேய், பாரத் மாதா கி - ஜேய்

மிக்க நன்றி.

**பொறுப்பு துறப்பு:** இது பிரதமர் நிகழ்த்திய உரையின் தோராயமான மொழிபெயர்ப்பாகும். பிரதமர் தமது உரையை இந்தியில் வழங்கி யிருந்தார்.

**- ராதிகா சிவசங்கர்**




# கடன் வாங்கியவர்களை கஷ்டப்படுத்தக் கூடாது:

## ரிசர்வ் வங்கி புதிய உத்தரவு!

கடன் வாங்கியோருக்கு நிவாரணம் வழங்கும் வகையில் ரிசர்வ் வங்கி புதிய விதிமுறையை உருவாக்கியுள்ளது. இது வங்கிகளுக்கு நெருக்கடியைக் கொடுக்கும். வாடிக்கையாளர்களுக்கு நிவாரணம் வழங்கும்.

**புதிய விதிமுறை**

நீங்கள் ஏதேனும் ஒரு வங்கியில் வீட்டுக் கடன் வாங்கியிருந்தால் உங்களுக்கு பெரிய நிவாரணம் கிடைக்கவிருக்கிறது. ரிசர்வ் வங்கியின் புதிய உத்தரவுக்குப் பிறகு, சொத்துக் கடன் தொடர்பான புதிய விதிகள் டிசம்பர் 1ஆம் தேதி முதல் அமலுக்கு வருகின்றன.

**ஒரு நாளைக்கு 5000 ரூபாய்**

இந்த விதியின்படி, நீங்கள் வீடு உள்ளிட்ட சொத்துகளின் மீது ஏதேனும் கடன் வாங்கியிருந்தால் கடனை முழுவதும் திருப்பிச் செலுத்திய 30 நாட்களுக்குள் கடன் தொடர்பான ஆவணங்களை வாடிக்கையாளருக்குத் திருப்பித் தர வேண்டும். இதை சம்பந்தப்பட்ட வங்கிகள் செய்யவில்லை என்றால் ஒரு நாளைக்கு 5000 ரூபாய் வீதம் அபராதம் செலுத்த வேண்டும்.

**காணாமல் போகும் ஆவணங்கள்**

கடன் தொடர்பான சொத்து ஆவணங்கள் காணாமல் போவதாக வாடிக்கையாளர்கள் கொடுத்த புகார்களை அடுத்து ரிசர்வ் வங்கியால் இந்த விதிமுறை வெளியிடப்பட்டுள்ளது. ரிசர்வ் வங்கிக்கு இதுபோன்ற பல புகார்கள் வந்துள்ளன. அதில் கடனைத் திருப்பிச் செலுத்திய பிறகு, வாடிக்கையாளர்கள் சொத்து ஆவணங்களுக்காக மாதக் கணக்கில் அலைய வேண்டியிருப்பதாகக் கூறியுள்ளனர்.

**ஆவணங்களுக்கு ஆபத்து**

சில சமயங்களில் சொத்து ஆவணங்கள் காணாமல் போய்விடும். வங்கிகளின் இத்தகைய அலட்சியத்தை கருத்தில் கொண்டு, இந்த உத்தரவை ரிசர்வ் வங்கி பிறப்பித்துள்ளது. ஒருவர் வீட்டுக் கடன் அல்லது எந்த வகையான சொத்துக் கடனையும் வாங்கும்போது அந்தச் சொத்தின் அசல் ஆவணங்களை வங்கி தன்னுடன் வைத்திருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

**30 நாட்கள் அவகாசம்**

கடன் வாங்கிய வாடிக்கையாளர் அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்திய பிறகு அசல் ஆவணங்களை திருப்பித் தர வேண்டும். ஆனால், வங்கிகளின் அலட்சியப் போக்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால் ரிசர்வ் வங்கி இந்த விதியை வெளியிட்டுள்ளது. அதன்படி, 30 நாட்களுக்குள் ஆவணங்களைத் திருப்பித் தர வேண்டும்.

**அபராதம் செலுத்த வேண்டும்**

இந்த விதி அமலுக்கு வந்த பிறகு வாடிக்கையாளர்களுக்கு நிம்மதி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுளுக்கு ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில், கடனை முழுமையாக திருப்பிச் செலுத்திய 30 நாட்களுக்குள் அனைத்து ஆவணங்களையும் வெளியிட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அப்படி வழங்காவிட்டால் வங்கி அபராதம் செலுத்த வேண்டும்.

**வங்கிகள் உதவ வேண்டும்**

ஆவணங்களைத் திருப்பித் தருவதில் தாமதம் ஏற்பட்டால் வங்கிகளுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.5,000 அபராதம் விதிக்கப்படும் என்று ரிசர்வ் வங்கி கூறியுள்ளது. அபராதத் தொகையை சம்பந்தப்பட்ட சொத்து உரிமையாளருக்கு அந்த வங்கி செலுத்த வேண்டும். கடன் வாங்குபவரின் சொத்து ஆவணங்கள் தொலைந்து போனால், அந்த ஆவணங்களின் நகல்களை பெற வாடிக்கையாளர்களுக்கு வங்கி உதவ வேண்டும் என்றும் ரிசர்வ் வங்கி அந்த அறிவிப்பில் கூறியுள்ளது.

- K.மாரிதுரை



# காடுகள் அழிக்கப்படுகிறதா?

பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் நிலப்பரப்பில் 57% (ஆறு பில்லியன் ஹெக்டேர்) ஆக்கிரமித்து அடவி (காடுகளின் தொகுதி), ஆசை அடங்கா அகம் கொண்ட ஆள்களால் கொஞ்சம் கொஞ்சமாகச் சுருங்கத் தொடங்கியது. கெஜ்ரி மரங்களைக் காக்க தன் மூன்று மகள்களுடன் உயிர் நீத்த பீஷ்னாய் சமூகப் பெண்மணி அமிர்தா தேவி போன்ற போராளிகள் இருந்த போதும் 1800-களில் கானகத்தின் நிலப்பரப்பு 55% (5.8 மில்லியன் ஹெக்டர்) குறைந்தது. 1900-களில் மனிதச் சுரண்டல்களால் அடவியின் ஆக்கிரமிப்பு மேலும் 48% (5.1 பில்லியன் ஹெக்டர்) குறைந்தது.

தொழில்நுட்ப வளர்ச்சியால் சுரண்டல்கள் சூடு பிடித்து 1950-களில் 44% (4.7 பில்லியன் ஹெக்டர்) குறைந்தது காடுகளின் நிலப்பரப்பு. 1973-ல் சுந்தர்லால் பகுகுணா தலைமையில் நிகழ்ந்த சிப்கோ இயக்கத்தின் முயற்சியால் 1980 -ல் இந்திராகாந்தி வனப் பாதுகாப்பு சட்டம் இற்றினார். இச்சட்டம் இமாலய மலைகளின் மரங்களை வெட்ட 15 ஆண்டுகள் தடையிட்டது. இது போன்ற கடுமையான சட்டங்கள் இருந்த போதும் இன்றைக்குக்காட்டின் பரப்பு 38% சுருங்கியுள்ளது என ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு கூறியுள்ளது.

காடுகள் குறைந்து தொழிற்சாலைகளும் சுற்றலா மையங்களும் விவசாயநிலங்களும் பெருகினால் நாட்டின் வேலைவாய்ப்பும் வருவாயும் உயரத்தானே போகிறது பிறகு ஏன் காட்டுப்பரப்புக் குறைவதைப் பெரிய குறையாக எண்ணிப் பேசுகிறார்கள் என்று கூறுகிறீர்களா..? அதற்கான பதிலைப் பார்ப்போம்.

ஒரு வருடத்திற்கு 11 டன் கரியமில வாயுவை ஒரு ஹெக்டர் காட்டுப்பரப்பு சேமிக்கிறது. உணவுச் சங்கிலியைச் சீரமைப்பதிலும் உயிர் பன்மயத்திற்கு உதவுவதிலும் பெரும்பங்கு வகிக்கிறது வனங்கள். நீர் சுழற்சியில் நீங்கா இடம் பிடித்துள்ள காடுகள் நீர் மேலாண்மையிலும் தவிர்க்க முடியாதவை ஆகும். பருவநிலையைச் சமன் செய்வதிலும் மழைப்பொழிவு பெருக்கம் மற்றும் அதன் விளைவுகளான நிலச்சரிவு மண்ணரிப்பு வெள்ளப்பெருக்கு முதலியவற்றைத் தடுப்பதிலும் சீரிய பங்கு வகிக்கின்றன இந்த தில்லங்கள்.

அருங்கானகத்திலேயே அருமருந்துகளும்; அன்றாட வாழ்வியலுக்கு அவசியமான உணவு, மரக்கட்டை, கால்நடை தீவனங்கள் என அனைத்தும் உருவாகின்றன. இரண்டே இரண்டு மரங்கள் ஒரு மனிதனின் சுவாசத்தேவைக்கான ஆக்சிஜனை வழங்குகின்றன. அதற்கான மதிப்பீடு இந்திய மதிப்பில் ஓராண்டுக்கு ரூபாய் 47 கோடியே 45 லட்சங்கள் ஆகும். இரண்டு மரங்களே பல கோடி மதிப்பிலான உயிர் வாழ்வுவை விலை இன்றி வழங்கும் போது ஒரு காடு பலநூறு கோடி ரூபாய் மதிப்பிலானவற்றை வழங்கி உலக உயிர்களைக் காக்கின்றன.

இவ்வளவு சேவைகளையும் நேரடியாகவும் மறைமுகமாகவும் வழங்கும் வனங்கள் நம் இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் 1.5 மில்லியன் ஹெக்டேர் பரப்பளவு குறைந்து கொண்டே வருகின்றன. கற்பகத் தருவாக அனைத்தையும் வழங்கும் காடுகளைக் காக்க வேண்டியது நமது கடன் அல்லவா?

**வன பாதுகாப்பும், வனவிலங்கு பாதுகாப்பும்**

உயிரி பன்மய சமன்பாட்டிற்கு வனவிலங்குகள் இன்றியமையாதவை ஆகும். சுற்றுலாத்துறை வருமானத்திற்கு வனவிலங்குகளின் பங்கும் உண்டு. இந்தியாவில் 1970 முதல் 2014 வரை வன உயிரினங்களின் எண்ணிக்கை 52% குறைந்துள்ளது. காடுகளின் பரப்பு சுருங்குதல் மற்றும் அதீத பயன்பாடு இவற்றால் வெள்ளை காண்டாமிருகம், தங்கத்தேரை, இமாலயக் குயில் முதலிய பல விலங்குகள் அழிவுற்றுள்ளன.

மேலும், ராமேஸ்வரம் பாராசூட் சிலந்தி, சைபீரியா கொக்கு முதலியனவை அழிவின் விளிம்பில் உள்ள நிலையில் இந்திய காண்டாமிருகம், நீலகிரி வரையாடு முதலியன அழிவை நோக்கி உள்ளன. ஒவ்வொரு வகை உயிரும் உலக சமன்பாட்டிற்கு அவசியம். வனம் பாதுகாப்பு வனவிலங்கு பாதுகாப்பிற்கு வழிவகுக்கும். இதற்குச் சான்றாகப் பல நிகழ்வுகள் உள்ளன.

**- இளைய தர்ஷினி**

# தூய்மைப் பணியில் பிரதமர் பங்கேற்பு

## மத்திய அமைச்சர்கள், ஆளுநர்கள், முதல்வர்கள் உள்பட பலர் பங்கேற்பு




தூய்மை இந்தியா திட்டத்தின் 9 வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் நடைபெற்ற தூய்மைப் பணியில் மத்திய அமைச்சர்கள், மாநில முதல்வர்கள் உள்பட பலர் பங்கேற்றனர். டில்லியில் மல்யுத்த வீரர் அங்கித் பையன் பூரியாவுடன் இணைந்து பிரதமர் மோடி தூய்மை பணியில் ஈடுபட்டார். சென்னை கடற்கரைப் பகுதியில் ஆளுநர் ஆர்.என். ரவி தூய்மைப் பணியில் ஈடுபட்டார்.

2014-ல் பிரதமர் மோடி தலைமையிலான பாஜக ஆட்சி அமைந்தது. அதே ஆண்டு அக். 2-ம் தேதி மகாத்மா காந்தி பிறந்த நாளன்று ‘தூய்மை இந்தியா’ திட்டத்தை பிரதமர் தொடங்கி வைத்தார். அதன் 9-ம் ஆண்டு தினம் இன்று கொண்டாடப்பட்டு வருகிறது. முன்னதாக இது குறித்து கடந்த 24-ம் தேதி ஒலிபரப்பான 105-வது `மனதின் குரல்’ நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பேசினார். அப்போது அவர், ‘‘காந்தி ஜெயந்தியன்று நாடு முழுவதும் தூய்மை இயக்கம் நடத்தப்பட்டு வருகிறது. மத்திய அரசின் அனைத்துத் துறைகளிலும் தூய்மை இயக்கம் வேகம் பெற்றிருக்கிறது. `மனதின் குரல்’ வாயிலாக நாட்டு மக்கள் அனைவரிடமும் ஒரு வேண்டுகோளை முன்வைக்கிறேன். காந்தி ஜெயந்தியை முன்னிட்டு அக். 1-ம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணிக்கு நாடு தழுவிய தூய்மை இயக்கம் நடத்தப்பட்டது. அதற்கு நேரம் ஒதுக்கி, தூய்மை இயக்கத்தில் அனைவரும் பங்கேற்றனர்.

உங்கள் தெருவில், அக்கம்பக்கத்தில், பூங்காவில், நதியில், குளத்தில், ஏரியில் அல்லது ஏதாவது ஒரு பொது இடத்தில் நடைபெறும் தூய்மை இயக்கத்தோடு உங்களை இணைத்துக் கொள்ளுங்கள். எங்கெல்லாம் அமுத நீர்நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறதோ, அங்கு கண்டிப்பாக தூய்மைப் பணியை மேற்கொள்ள வேண்டும். இந்த தூய்மை இயக்கமே, காந்தியடிகளுக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலி’’ என்று தெரிவித்தார்.

பிரதமரின் இந்த அழைப்பை ஏற்று நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தூய்மைப் பணிகள்

நடைபெற்றன. குஜராத்தின் அகமதாபாத் நகரில் நடைபெற்ற தூய்மைப் பணி இயக்கத்தில் பங்கேற்ற மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, சாலைகளில் கிடைந்த குப்பைகளை அகற்றி தூய்மைப்படுத்தினார். மத்திய அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ், ஹரியானாவின் குருகிராம் நகரில் தூய்மைப் பணியை மேற்கொண்டார். தூய்மைப் பணியாளர்கள் அணியும் சீருடையை அணிந்து கொண்டு குப்பைகளைப் பெருக்கி வீதியை அவர் சுத்தம் செய்தார்.

உத்தரப்பிரதேச முதல்வர் யோகி ஆதித்யாநாத், சீதாபூர் நகரில் தூய்மைப் பணியை மேற்கொண்டார். அவரோடு இணைந்து ஏராளமானோர் தூய்மைப் பணிகளை மேற்கொண்டனர். மும்பையில் நடைபெற்ற தூய்மை இயக்கத்தில் மகாராஷ்ட்டிர முதல்வர் ஏக்நாத் ஷிண்டே பங்கேற்று குப்பைகளை அகற்றி இடத்தை சுத்தம் செய்தார். மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங், டெல்லியில் தூய்மைப் பணியில் ஈடுபட்டார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "சுதந்திர தின உரையில் தூய்மை இந்தியா இயக்கத்திற்கு பிரதமர் மோடி அழைப்பு விடுத்தார். அவரது அழைப்பை ஏற்று ஏராளமான மக்கள் தூய்மைப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். தற்போது இது ஒரு இயக்கமாகவே மாறிவிட்டது" என கூறினார். மத்திய அமைச்சர் ராஜீவ் சந்திரசேகர், டெல்லியின் சப்தர்ஜங் ரயில் நிலையத்தில் தூய்மைப் பணியை மேற்கொண்டார். ராஜஸ்தானின் கோட்டா பகுதியில் மத்திய அமைச்சர் பியூஷ் கோயல், மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா ஆகியோர் தூய்மைப் பணிகளை மேற்கொண்டார்கள்.

தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி சென்னை, உத்தண்டி, நயினார்குப்பம் மீனவ கிராம மாணவர்கள், தன்னார்வலர்கள், குடியிருப்புவாசிகளுடன் சேர்ந்து பிரதமர் மோடி தொடங்கிய தேசிய அளவிலான தூய்மை சேவை என்ற சமூகம் முன்னெடுக்கும் தூய்மை பிரசார இயக்கத்தில் பங்கெடுத்தார். இதனையடுத்து, ஆளுநர் ரவி தூய்மை பணியாளர்களுடன் கலந்துரையாடி, சமூக சுற்றுப்புறத்தை சுகாதாரமாகவும் தூய்மையாகவும் வைத்திருப்பதில் அவர்கள் காட்டும் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு மற்றும் தன்னலமற்ற சேவைகளைப் பாராட்டினார்.

இந்த முன்னெடுப்பு குறித்து மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் புரி நேற்று கூறும்போது, "நாடு முழுவதும் தூய்மைப் பணிகள் மேற்கொள்ள நகரங்கள், கிராமங்களில் 6.4 லட்சம் இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இந்த பிரம்மாண்ட திட்டத்தின் கீழ் அதிக குப்பை குவிந்து கிடக்கும் இடங்கள், ரயில் தண்டவாளங்கள், ரயில் நிலையங்கள், விமான நிலையங்கள், தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலையோரங்கள், நீர்நிலைகள், குளம், நதிக்கரைகள், குடிசை மாற்று வாரியப் பகுதிகள், பாலங்களின் கீழ் பகுதிகள், சந்தைகள், வழிபாட்டுத் தலங்கள், சுற்றுலாத் தலங்கள், பேருந்து நிலையங்கள், சுங்கச்சாவடிகள், உயிரியல் பூங்காக்கள், கோ சாலைகள், மலை, கடலோரங்கள், துறைமுகங்கள், குடியிருப்புப் பகுதிகள், அங்கன்வாடிகள், பள்ளி, கல்லூரிகள் என பெரும்பாலான இடங்களில் தூய்மைப் பணி நடைபெறும்" என தெரிவித்திருந்தார்.



**முப்படைகள் பங்கேற்பு:** இந்தப் பணியில் ஈடுபட நகர்ப்புறங்களில் உள்ள ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட குடியிருப்பு நலச் சங்கங்கள் முன்வந்துள்ளன. கிராமங்களிலும் 35 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அங்கன்வாடி மையங்கள் தூய்மைப் பணியில் ஈடுபட உள்ளன. தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், மார்க்கெட் சங்கங்கள், வர்த்தக அமைப்புகள், தனியார் துறையினர் என பல்வேறு தரப்பினரும் தூய்மைப் பணியில் ஈடுபட முன்வந்துள்ளனர். முதல்முறையாக ராணுவம், கப்பல் படை, விமானப் படையினரும் மக்களுடன் ஒன்றிணைகின்றனர். அவர்கள் ரயில் தண்டவாளங்கள், பாரம்பரியக் கட்டிடங்கள், கோட்டைப் பகுதிகளில் தூய்மைப் பணிகளில் ஈடுபட உள்ளனர். மேலும், பாபா ராம்தேவின் பதஞ்சலி யோகா பீடம் மற்றும் உள்ளூர் சமூக மக்கள் தூய்மைப் பணியில் ஈடுபடுகின்றனர். இதுதவிர, அப்ரோஸ் ஷா, சுதர்சன்பட்நாயக் உள்ளிட்ட பிரபலங்களும் இதில் கலந்து கொள்கின்றனர். பொதுக் கழிப்பிடங்களில் தூய்மைப் பணியை மேற்கொள்ள சுலப் இன்டர்நேஷனல் முன்வந்துள்ளது.

**- தமிழ் வீரன்**

# பொது இடங்களில் குப்பைகளைப் போட வேண்டாம்:

## உழவர்கரை நகராட்சி ஆணையர் சுரேஷ்ராஜ் வேண்டுகோள்

உழவர்கரை நகராட்சியைத் தூய்மையாகவும் அழகாகவும் வைத்துக்கொள்ளப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நகராட்சியில் ஒரு நாளைக்கு சுமார் 150 மெட்ரிக் டன் குப்பை சேகரிக்கப்படுகின்றது. இதில் சுமார் 35 சதவீதம் பிளாஸ்டிக் குப்பையாகும். ஒரு முறை மட்டுமே பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களை மக்கள் பயன்படுத்தாமல் நிறுத்தினாலே நகரம் அழகாகிவிடும். பொதுமக்கள் குப்பைகளைக் கவனமாகத் தரம் பிரித்துத் தரவேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் பொதுமக்கள் குப்பைகளை சாலைகள், கால்வாய்கள், காலிமனைகளில் போடக்கூடாது என்று உழவர்கரை நகராட்சி ஆணையர் திரு. ஏ.சுரேஷ்ராஜ் கேட்டுக்கொண்டார்.

இந்திய அரசின் மத்திய தகவல் தொடர்பகம் மற்றும் நாட்டு நலப்பணித் திட்டம் இணைந்து இன்று முற்பகல் செயின்ட் பேட்ரிக் சீனியர் செகண்டரி பள்ளியில் நடத்திய தூய்மை இருவார சேவை சிறப்பு நிகழ்ச்சியில் உரையாற்றியபோது திரு. சுரேஷ்ராஜ் இவ்வாறு கேட்டுக்கொண்டார்.

நிகழ்ச்சிக்குப் பள்ளித் தாளாளர் திரு ரெஜீஸ் ஃபிரெடெரிக் தலைமை வகித்தார். பள்ளித் தலைமையாசிரியர் திருமிகு, அல்ஃபோன்சா ஹில்டா முன்னிலை வகித்தார்.

மத்திய தகவல் தொடர்பக துணைஇயக்குனர் முனைவர் தி.சிவக்குமார் சிறப்புரை ஆற்றினார். கீப் தொண்டு நிறுவனத்தின் திரு.கௌதம்குகன் குப்பைகளைக் கையாளும் முறைகள் குறித்து உரை ஆற்றினார். மாணவர்கள் தூய்மை இந்தியா உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். நகராட்சி ஆணையர் ஏ.சுரேஷ்ராஜ் துண்டு பிரசுரங்களை வெளியிட்டார்.

இதைத் தொடர்ந்து இதே நிகழ்ச்சி முத்துரத்தினம் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. பள்ளி முதல்வரும் தாளாளருமான திரு. ஜே.சுந்தர்ராஜன் முன்னிலை வகித்தார். மத்திய தகவல் தொடர்பக துணை இயக்குனர் முனைவர் தி.சிவக்குமார் சிறப்புரை ஆற்றினார். மாணவர்கள் தூய்மை இந்தியா உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

பிற்பகல் மூன்றாம் நிகழ்ச்சி இந்திராநகர் இந்திராகாந்தி அரசு மேல் நிலைப்பள்ளியில் நடைபெற்றது. மாநில நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் திரு. தா.சதீஷ்குமார் சிறப்புரை ஆற்றினார். குப்பைகளை உருவாக்குகின்ற நாம்தான் குப்பைகளை அகற்றுவதற்கும் பொறுப்பு ஏற்க வேண்டும். நாட்டு நலப் பணித்திட்ட மாணவர்கள் எப்போதும் எங்கும் தவறாமல் தூய்மைப் பணியில் ஈடுபடுவார்கள். இவர்கள் தூய்மைக் காவலர்கள். இந்த சேவை மனப்பான்மையை மாணவர்கள் தங்கள் வாழ்க்கை முழுவதும் தொடர வேண்டும் என்று திரு. தா.சதீஷ்குமார் தனது உரையில் கேட்டுக் கொண்டார்.












மத்திய தகவல் தொடர்பக துணை இயக்குனர் முனைவர் தி.சிவக்குமார் சிறப்புரை ஆற்றினார். மாணவர்கள் தூய்மை இந்தியா உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

பள்ளித் துணை முதல்வர் திரு. சந்திரன் , பள்ளிக் கல்விக்கான நாட்டு நலப் பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு.கே.மதிவாணன், பள்ளி என்.என்.எஸ். அலுவலர் திரு.லட்சுமி நாராயணன் ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

மாநில நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் திரு. தா.சதீஷ்குமார் துண்டு பிரசுரங்களை வெளியிட்டார்.

- கா.சுபுலட்சுமி

# STATEMENT OF OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT PENA KURAL, TAMIL MONTHLY FORM IV (See Rule 8)


| | |
|---|---|
| 1. Place of publication | : **7/13, 2nd Floor, Ponmanachemmal Street, M.G.R Nagar, K.K.Nagar, Chennai - 600 078.** |
| 2. Periodicity | : **Monthly** |
| 3. Printer Name | : **NV SIVASHANKAR** |
| (a) Whether Citizen of India | : **Yes** |
| (b) Nationality | : **Indian** |
| (c) Address | : **J.M. PROCESS No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002.** |
| 4. Publisher Name | : **NV SIVASHANKAR** |
| (a) Whether Citizen of India | : **Yes** |
| (b) Nationality | : **Indian** |
| (c) Address | : **7/13, 2nd Floor, Ponmanachemmal Street, M.G.R Nagar, K.K.Nagar, Chennai - 600 078.** |
| 5. Editor Name | : **RATHIKA S** |
| 6. RNI No. | : **TNTAM/2022/85375** |
| 7. Price Per Copy | : **Rs. 20/-** |

**I, NV SIVASHANKAR, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.**

Dated: **10.10.2023**

**NV SIVASHANKAR**
Publisher



# பாஜகவின் பலம் தமிழ்நாட்டில் அதிகரித்துள்ளதா?

பாஜக மாநில தலைவர் அண்ணாமலை சென்னையில் நடந்த மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் பங்கேற்றார். அதைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசியபோது, "வரவுள்ள 2024 என்பது நரேந்திர மோடிக்கான தேர்தல். இந்தத் தேர்தலில் அனைத்து தொகுதிகளும் நரேந்திர மோடியின் வசம் கிடைக்கும்," என்று தெரிவித்தார்.

அதுமட்டுமின்றி, தமிழ்நாட்டில் கடந்த இரண்டு ஆண்டுகளில் பாஜக பலம் பொருந்திய கட்சியாக வளர்ந்துள்ளது என்றும் இந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியே திமுகவுக்கும் பாஜகவுக்கும்தான் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அண்ணாமலை சொல்வதுபோல், திமுகவை தனித்து நின்று எதிர்க்கும் அளவுக்கு பாஜக கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழகத்தில் பலம் வாய்ந்த கட்சியாக வளர்ந்துள்ளதா, அவரது கடுமையான அணுகுமுறை கட்சிக்கு சாதகமாக அமைந்துள்ளதா?

**அண்ணாமலை திமுக குறித்து என்ன பேசினார்?**

செய்தியாளர்களிடம் பேசிய அண்ணாமலை, "இது எங்களுடைய தேர்தல். அதற்கான பணிகளை நாங்கள் செய்யப் போகிறோம். 2024 தேர்தல் மட்டுமே இதற்கு ஒரேயொரு பதில். கருத்துகளை யார் வேண்டுமானாலும் கூறலாம். ஆனால், இதற்கு தேர்தல் முடிவுகளே சரியான பதிலைக் கூற முடியும்." என்று பதிலளித்தார்.

வரவுள்ள 2024 தேர்தல் முடிவுகள் நிச்சயமாக பாஜகவுக்கும் தேசிய ஜனநாயக கூட்டணிக்கும் ஆதரவாகத்தான் இருக்கும் எனக் கூறிய அண்ணாமலை, "அதிமுகவா பாஜகவா என்ற நிலை இங்கு இல்லை என்றும் 2024 தேர்தலைப் பொறுத்தவரை திமுகவா பாஜகவா என்பதே போட்டி என்றும் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

"பாஜக பத்து ஆண்டுகளாக மத்தியில் ஆட்சியில் இருக்கிறது. தேர்தல் நடைபெறும்போது திமுக ஆட்சிக்கு வந்து 35 மாதங்கள் முடிவடைந்திருக்கும். இந்நிலையில், திமுகவின் ஆட்சியை மதிப்பீடு செய்து, மக்கள் முடிவெடுப்பார்கள். அதனால்தான் திமுக, பாஜக இரண்டுக்குமான போட்டி இது," என்று அண்ணாமலை தெரிவித்தார்.

பாஜக யாருடன் மோத வேண்டும் என்பதில் தெளிவாக இருப்பதாகக் குறிப்பிட்டவர், "நாங்கள் மோத வேண்டியது திமுகவிடம்தான். மற்ற கட்சிகளுக்கு அதிகாரம் இல்லாதபோது, அவர்களுக்குப் பதில் கூறுவதில் பயனில்லை," என்றார்.

மாநிலத்தில் ஆளுங்கட்சியாக இருக்கும் திமுகவும் மத்தியில் ஆளுங்கட்சியாக இருக்கும் பாஜகவும் நாடாளுமன்ற தேர்தலில் மோதுவதாக அண்ணாமலை உறுதியாகத் தெரிவித்தார்.

"பாஜக அடிப்படையிலேயே பலம் பெற்றிருக்கிறது. வரவுள்ள 2024 தேர்தல் அதை உறுதி செய்யும்," என்று குறிப்பிட்டார் பாஜக மாநில தலைவர் அண்ணாமலை.

வரவுள்ள 2024 தேர்தல் திமுக தோல்வியடைந்தால், அது மக்களின் மனப்போக்கைக் காட்டுவதாக இருக்கலாம். ஆனால், இந்த நாடாளுமன்ற தேர்தலின் முக்கிய அம்சமாக நரேந்திர மோடி ஆட்சி தொடர வேண்டுமா இல்லையா என்பதாகத்தான் இருக்கும். தமிழ்நாட்டில் திமுகவை தனித்து நின்று எதிர்ப்பதைவிட, அதிமுகவுடன் கூட்டணியில் நின்று எதிர்ப்பது பாஜகவுக்கு சாதகமாக இருக்கலாம் என்பதால் தேர்தல் நேரத்தில் டெல்லி தலைமை என்ன முடிவு எடுக்கும் என்பதைப் பொறுத்தே புரிந்துகொள்ள முடியும்.

**- தி.பாமா**

# தமிழ்நாடு: தூய்மைப் பணியின் முன்னணியில் இளம் படைப்பாளிகள்





கடந்த 9 ஆண்டுகளாக தூய்மை இந்தியா திட்டத்தின் வெற்றியின் விளைவாக இன்று தூய்மை ஒரு திருவிழா போல கொண்டாடப்படுகிறது. சமூகத்தின் அனைத்து தரப்பு குடிமக்களும் குப்பை இல்லாத இந்தியாவை உருவாக்குவதற்கான விழாக்களில் இணைகிறார்கள். தூய்மையே முக்கியம்-தூய்மையே சேவை என்ற திட்டம் தொடங்கப்பட்டது. பெரியவர்களும், குழந்தைகளும் இந்த தூய்மை இயக்கத்தில் அதிக அளவில் இணைந்து வருகின்றனர். தமிழ்நாட்டில் தூய்மையே சேவை இயக்கம் தினமும் மாணவர்களின் செயல்பாடுகளுடன் திட்டமிடப்பட்டுள்ளது. பள்ளி, கல்லூரி மாணவர்களை பெருமளவில் திரட்டி சுகாதாரப் புரட்சிக்கு உத்வேகம் அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், திடக்கழிவு மேலாண்மை, ஒரு முறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்கின் தீமைகள் குறித்த விழிப்புணர்வை பரப்ப பல முக்கிய நடவடிக்கைகள் மற்றும் சிறிய அளவிலான இயக்கங்கள் நடத்தப்பட்டன.

மேலும், மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பல்வேறு கல்வி நிறுவனங்களில் நடத்தப்பட்ட தூய்மையே சேவை நடவடிக்கைகளில் 1 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றது மகிழ்ச்சியான தருணமாக இருந்தது.

பொது விழிப்புணர்வு மற்றும் தூய்மை இயக்கங்கள் தவிர, பல நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் திடக்கழிவு மேலாண்மை நிலையங்களை காண மாணவர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும், பள்ளிகளில் கழிவுகளில் இருந்து உபயோகமான பொருட்கள் தயாரிப்பதற்கான போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் பல மாணவர்கள் கழிவுகளிலிருந்து கலைப்பொருட்களை தயாரித்து, கண்காட்சியில் காட்சிக்கு வைத்திருந்தனர்.

மேலும், ஈர மற்றும் உலர் கழிவுகளை பிரிப்பது குறித்து மாணவர்களுக்கு விளக்கப்பட்டது. அனைத்து பள்ளிகளிலும் ஈரக்கழிவுகளை தாங்களே நிர்வகிக்க ஆன்சைட் உரம் தயாரிக்கும் பணி தொடங்கப்பட்டு, வீட்டில் உரம் தயாரிப்பதற்கான எளிய நுட்பங்கள் மாணவர்களுக்கு கற்பிக்கப்பட்டன. பிரச்சாரத்தின் போது பேரணிகள், மாரத்தான்கள், சைக்ளோதான்கள் போன்றவையும் நடத்தப்பட்டன. ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை மற்றும் பிளாஸ்டிக்கிற்கு மாற்று பொருட்கள் குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

சில பள்ளிகளில், துணிப்பைகள் வினியோகிக்கப்பட்டன. மூல உரம் பிரித்தல் மற்றும் வீட்டு உரம் தயாரிக்கும் தொழில் நுட்பங்கள் குறித்த துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. எதிர்காலத்தில் தூய்மையான இந்தியாவை உருவாக்குவதில் பள்ளி, கல்லூரி மாணவர்கள் போன்ற இளைஞர்களின் ஈடுபாடும், முனைப்பான பங்களிப்பும் முக்கிய பங்கு வகிக்கும் என்பதால் தமிழக மாணவர்கள் இதில் ஈடுபட்டு வருகின்றனர்.

**- அன்பு மணி**






# கோவையில் 'ஆரோக்ய வனம்' தொடக்கம்: இதன் பயன் என்ன?

கோவை கிராமங்களில் பிரிக்கால் நிறுவனத்துடன் இணைந்து "ஆரோக்ய வனம்" திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. மருத்துவ தாவரங்களின் பயன்பாடு என்பது மனிதர்களின் நோய்களை குணப்படுத்துவதற்கான சிறந்த அமுதமாக வரலாற்றுக் காலம் முதல் அமைந்துள்ளது.

18ஆம் நூற்றாண்டில் நவீன மருத்துவத்தின் வருகையினால் வெகுவாக பயன்பாட்டில் இருந்த தொன்மையான பழக்கவழக்கங்களும், மூலிகை மருத்துவமும் அதன் தனித்துவத்தை இழக்க ஆரம்பித்தது. மேலும் அனைவரது எண்ணங்களில் இருந்தும் மறைய ஆரம்பித்துள்ளது.

உடல் மற்றும் மனம் இரண்டையும் குணப்படுத்தும் மருத்துவ தாவரங்கள் மற்றும் மரங்களைப் பயன்படுத்தும் பழங்கால நடைமுறையை மீட்டெடுக்கும் ஒரு முன்முயற்சியாக - சிறுதுளியுடன் - பிரிக்கால் நிறுவனத்துடன் இணைந்து மருத்துவ குணங்கள் கொண்ட மரங்கள் மற்றும் மூலிகை வகைகளை உள்ளடக்கிய ஒரு செழிப்பான சுற்றுச்சூழலை அமைக்கும் விதமாக உருவானது "ஆரோக்ய வனம்". தொடங்கப்பட்டுள்ளது.

இதன் தொடக்க விழாவானது கோவை பேரூர் செட்டிபாளையம் உள்ள பச்சாபாளையம் கிராமத்தில் நடைபெற்றது. இந்த வனத்தில் உள்ள தாவரங்களின் வேர்கள், தண்டு, கிளைகள், இலைகள் மற்றும் பூக்கள் மனித குலத்திற்கு மிகவும் பயன்படுகிறது.

இதயம், வயிறு, நுரையீரல், எலும்புகள் மற்றும் தோல் போன்ற நமது உடலின் அத்தியாவசிய பாகங்கள் முக்கியமாக தாவரங்களிலிருந்து பயனடையும் வகையில் பல்வேறு பிரிவுகளில் நடப்பட்ட 120 வகையான மருத்துவ தாவரங்கள் மற்றும் மூலிகைகளை இங்கு வகைப்படுத்தப்பட்டுள்ளதால் நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்க இவை பங்களிக்கின்றன.

மியாவாக்கி மாதிரியை அடிப்படையாகக் கொண்டு, அமைப்பைச் சுற்றி மொத்தம் 650 மருத்துவ மரங்கள் நடப்பட்டன. ஆரோக்யா வனம் பற்றி டாக்டர்.ஜி.சிவராமன் தனது சிறப்புரையில் நாட்டு மூலிகைகள் மற்றும் மருந்துகளின் திறன் பற்றி விரிவாகப் பேசினார். எதிர்கால சந்ததியினருக்கு ஆரோக்கியமான சூழலை உருவாக்க இதுபோன்ற பல முயற்சிகளை ஊக்குவிப்பதில் இங்குள்ள அனைவரும் பங்கேற்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

- ந.திவாணன்

# சாதனை படைத்த தமிழ்நாட்டு விண்வெளி விஞ்ஞானிகளுக்குப்

# பாராட்டு விழா






முனைவர் கே. சிவன் | முனைவர் மயில்சாமி அண்ணாதுரை | முனைவர் வி. நாராயணன் | திரு.ஏ.இராஜராஜன் | திரு.எம்.சங்கரன் | திரு.ஜெ.ஆசிர் பாக்கியராஜ் | திருமதி. மு வனிதா | திருமதி. நிகார் ஷாஜி | முனைவர் ப. வீரமுத்துவேல்

இந்திய விண்வெளித்துறையில் சாதனை படைத்த தமிழ்நாட்டு விஞ்ஞானிகளை கவுரவிக்கும் விதமாக, உயர் கல்வித்துறையின் சார்பில் ''ஒளிரும் தமிழ்நாடு மிளிரும் தமிழர்கள்'' என்ற தலைப்பில் சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் பாராட்டு விழா நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற இந்த பாராட்டு விழாவில், இஸ்ரோ முன்னாள் தலைவர்கள் மயில்சாமி அண்ணாதுரை, சிவன் மற்றும் இஸ்ரோ விஞ்ஞானிகள் நாராயணன், ராஜராஜன், சங்கரன், ஆசிர் பாக்கியராஜ், வனிதா, ஆதித்யா எல்1 திட்ட இயக்குநர் நிகர் ஷாஜி, சந்திரயான் 3 திட்ட இயக்குநர் வீரமுத்துவேல் உள்ளிட்டோர் தமிழ்நாடு அரசு தரப்பில் கவுரவிக்கப்பட்டனர்.அதைத் தொடர்ந்து விண்வெளி துறையில் சாதனை படைத்த நாயகர்களுக்கு நினைவுப் பரிசுகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். தொடர்ந்து விழா மேடையில் மு.க.ஸ்டாலின் பேசியதாவது, ''தமிழ்நாட்டின் முதலமைச்சராக மட்டுமல்ல, தமிழனாக பிறந்ததற்கு பெருமை கொள்கிறேன்.

பாரதியார் இருந்திருந்தால் இஸ்ரோ சிவன், மயில்சாமி அண்ணாதுரை பிறந்த தமிழ்நாடு என சொல்லி இருப்பார். இந்த நாட்டில் ஏன் ஐன்ஸ்டீன், தாமஸ் ஆல்வா எடிசன் உருவாகவில்லை எனக் கேட்டவர் அண்ணா. அதனால் அவர் பெயரிலான அரங்கில், அறிவியல் அறிஞர்களான உங்களை அழைத்து பாராட்டுவதே சிறந்தது. வீரமுத்துவேல் உள்ளிட்ட தமிழர்கள் இஸ்ரோவில் கொடிகட்டி பறப்பது தமிழ்நாட்டிற்கு பெருமை. அதனால் தான் அனைத்து தமிழர்கள் சார்பாக உங்களை அழைத்து பாராட்டுகிறோம். இந்த மேடை சமூக நீதிக்கு எடுத்துக்காட்டாக இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. தமிழ்நாட்டு இளைய சமுதாயம் இவர்களை தான் எடுத்துக்கட்டாக வைத்து முன்னேற வேண்டும்.

திண்ணை பள்ளிக் கூடத்தில் படித்து விண்ணைத் தொட்டவர் மயில்சாமி அண்ணாதுரை. சந்திரயான் திட்டத்தின் 3 இயக்குநர்களும் தமிழர்கள் என்பதே நமக்கு பெருமை. இந்தியாவிற்கும், தமிழ்நாட்டுக்கும் பெருமை ஏற்படுத்தி கொடுத்த, இனியும் ஏற்படுத்திக் கொடுக்கப் போகின்ற அறிஞர்கள் 9 பேருக்கும் தமிழ்நாடு அரசு சார்பில் தலா 25 லட்சம் ரூபாய் வழங்கப்படும்.அரசு பள்ளி மாணவர்களுக்கான 7.5% இட ஒதுக்கீட்டின் கீழ் அரசு கல்வி உதவித் தொகை பெற்று இளநிலை பொறியியல் முடித்து, முதுநிலை படிப்பை தொடரும் 9 மாணவர்களுக்கு சாதனை விஞ்ஞானிகள் பெயரில் ஸ்காலர்ஷிப் வழங்கப்படும். இதற்காக 10 கோடி ரூபாய் தொகுப்பு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்'' என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

- **பா.சரவணன்**

# நிலத்தடி நீர் உறிஞ்சப்படுவதால் கருகிப்போன பனை மரங்கள்





திருநெல்வேலி தூத்துக்குடி மாவட்டங்களில் லட்சக்கணக்கான பனை மரங்கள் கருகிவிட்டன. பனை மரங்களை மீட்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழகத்தின் மாநில மரமாக கற்பகத்தரு என அழைக்கப்படும் பனைமரம் உள்ளது. இந்திய அளவில் 10 கோடிக்கும் மேல் பனைமரங்கள் உள்ளன. அதில் 5 கோடிக்கும் மேற்பட்டவை திருநெல்வேலி தூத்துக்குடி தென்காசி ராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ளன.

தூத்துக்குடி மாவட்டத்தில் விளாத்திகுளம் சாத்தான்குளம் திசையன்விளை திருச்செந்தூர் பகுதிகளில் லட்சக்கணக்கில் உள்ளன. இம்மரத்தின் அடி முதல் ஓலை வரை பல்வேறு வகையில் பயன்படுகின்றன.

ஆஸ்திரேலியா ஜப்பான் அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாடுகளுக்கு பனைப் பொருட்கள் ஏற்றுமதி மூலம் ஆண்டுதோறும் இந்தியாவிற்கு ரூ. 200 கோடி அந்நிய செலாவணி கிடைக்கிறது.

**கருகிய பனைமரங்கள்**

திருநெல்வேலி தூத்துக்குடி மாவட்டங்களில் கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவமழை பொய்த் விட்டது. பாபநாசம் மணிமுத்தாறு அணைகளில் இருந்து குடிநீர் தவிர விவசாயத்துக்கு கூட தண்ணீர் திறக்க முடியவில்லை. மழையின்மையால் லட்சக்கணக்கான பனை மரங்கள் கருகிப் போய்விட்டன.

தூத்துக்குடி மாவட்டம் பேய்க்குளம் அருகே கருங்கடல் ஊராட்சிக்கு உட்பட்ட பழனியப்பபுரம் பனைக்குளம் திருவரங்கனேரி செட்டிகுளம் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் பனை மரங்கள் கருகி கிடக்கின்றன.

கருங்கடலைச் சேர்ந்த கோயில்ராஜ் கூறியது: எனக்கு 65 வயது ஆகிறது. எத்தகைய வறட்சியையும் பனை மரங்கள் தாக்கு பிடிக்கும். இதற்கு முன்பும் இதே போல மழை பெய்யாத காலங்களை பார்த்திருக்கிறேன்.

ஆனால் இந்த ஆண்டு லட்சக்கணக்கான பனை மரங்கள் அடியோடு காய்ந்து விட்டன. இதற்கு 600 அடி ஆழம் வரை போர்வெல் அமைத்து நிலத்தடி நீரை உறிஞ்சுவதே காரணம்.

நாங்கள் பனை தொழிலை நம்பித்தான் உள்ளோம். பனைமரங்கள் இல்லாவிட்டால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வாழ்க்கை மிகுந்த சிரமத்துக்குள்ளாகும். எனவே தமிழக அரசும் பனை வாரிய அதிகாரிகளும் தென் மாவட்டங்களில் ஆய்வு செய்து பனை மரங்களை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

**செங்கல்சூளைக்கு பனைமரங்கள்**

தமிழகத்தில் பனை மரங்கள் வெட்டப்படுவதும் தொடர்ந்து நடக்கிறது. பட்ஜெட்டில் அறிவிப்பின் போது பனை மரங்கள் வெட்ட தடை விதித்து உத்தரவிடப்பட்டது. செங்கல் சூளைகளில் எரிபொருளாக பனை மரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. 50 ஆண்டு வளர்த்த பனைமரங்கள் வெறும் 400 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. பேய்க்குளம் சுற்று வட்டாரங்களில் காய்ந்து கிடக்கும் மரங்களை அங்கேயே வெட்டி போட்டு விற்கின்றனர்.

பனைமரங்களை பாதுகாக்க வேண்டும். டாஸ்மாக் மதுபானத்திற்கு பதில் கள் விற்பனைக்கு அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் கள் இயக்கம் நடத்திவரும் நல்லசாமி கூறியது:

தமிழகத்தை விட பாதிக்கும் குறைவான மழை பொழிவை கொண்ட நாடு இஸ்ரேல். அங்கு இயற்கையான ஊற்றுகள் குளங்கள் ஊருணிகள் போன்றவற்றின் நீரை தான் பயன்படுத்த வேண்டுமே தவிர ஆழ்குழாய் கிணறு போர்வெல் அமைக்க கூடாது என சட்டம் உள்ளது. ஆழ்குழாய் கிணறு மூலம் உறிஞ்சப்படும் தண்ணீரால் பனைமரங்கள் கருகுகின்றன. பனை ஒழிந்தால் சூழலும் விவசாயமும் பாதிக்கப்படும். மீண்டும் உணவு பஞ்சம் ஏற்படும் என்றார்.

**ஒரு கோடி பனை விதை**

தமிழக முழுவதும் முன்னாள் முதல்வர் கருணாநிதி நூற்றாண்டையொட்டி பனை மர வாரியத்தின் மூலம் ஒரு கோடி பனை விதைகளை கடற்கரை கிராமங்களில் விதைக்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. தமிழக அரசும் கடந்த பட்ஜெட்டில் பனைத் தொழிலை பாதுகாக்க பல்வேறு திட்டங்களை அறிவித்தது.

தமிழகத்தில் ஒரே நாளில், 14 மாவட்டங்களில் உள்ள கடற்கரையோர பகுதிகளில், ஒரு கோடி



பனை விதைகள் விதைக்கப்பட்டன.

கருணாநிதி நூற்றாண்டு விழாவை ஒட்டி, தொழிலாளர் நலத்துறை மற்றும் தமிழக பனைமர தொழிலாளர்கள் நல வாரியம் வாயிலாக, பனை விதைகள் விதைக்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டு உள்ளது.

இத்திட்டத்தின் கீழ், கடற்கரையோர பகுதிகளில், ஒரே நாளில் ஒரு கோடி பனை விதைகள் விதைக்கும் திட்டம் நேற்று செயல்படுத்தப்பட்டது.

சென்னை மெரினா கடற்கரை, அவ்வையார் சிலை அருகில், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கணேசன், தமிழக பனைமர தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் நாராயணன் ஆகியோர், பனை விதைகளை விதைத்து திட்டத்தை துவக்கி வைத்தனர்.

அதன்பின், சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய, 14 மாவட்ட கடற்கரையோரங்களின், 430 இடங்களில், ஒரு கோடி பனை விதைகள் விதைக்கப்பட்டன.

தமிழகத்தில், 1,076 கி.மீ., கடற்கரையோர பகுதிகளில், ஒரு கோடி பனை விதைகள் விதைக்கும் சாதனையை பாராட்டி, குளோபல் வேர்ல்ட் ரெக்கார்டு நிறுவனம் வாயிலாக, பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது.

புதிதாக பனை விதைகள் விதைப்பது ஒரு புறம் நடந்தாலும் ஏற்கனவே 100 ஆண்டுகளுக்கு மேலாக வளர்த்தெடுக்கப்பட்ட பனை மரங்களை அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டியதும் அரசின் கடமையாகும்.

**- கா.கலைமணி**

# வண்டலூர் பூங்காவில் 3 ஆண்டுக்கு பிறகு சிங்கம், மான்களை வாகனத்தில் சென்று பார்க்கும் வசதி தொடக்கம்

வண்டலூர் உயிரியல் பூங்காவில் சுமார் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விலங்குகள், பறவைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஆண்டுக்கு சுமார் 10 லட்சம் பேர் பூங்காவுக்கு வந்து இதனை பார்த்து ரசித்து செல்கிறார்கள்.

கொரோனா ஊரடங்கின்போது கடந்த 3 ஆண்டுக்கு முன்பு பூங்காவில் சிங்கங்களை வாகனத்தில் சென்று பார்வையிடும் "லயன்சபாரி" நிறுத்தப்பட்டது. பின்னர் பூங்கா வழக்கமாக திறந்த பின்னரும் சிங்கங்களை வாகனத்தில் சென்று பார்வையிடும் வசதி ஏற்படுத்தப்படவில்லை.

இதனால் சிங்கங்களை பார்வையிடும் "லயன் சபாரி"யை மீண்டும் தொடங்க வேண்டும் என்று பொதுமக்கள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்தனர். இதைத் தொடர்ந்து லயன் சபாரியை தொடங்க பூங்கா அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர். இதற்காக தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடன் ஏ.சி. பஸ்கள் வாங்கப்பட்டது. மேலும் சிங்கங்கள் உலாவும் பகுதியில் நவீனப்படுத்தப்பட்டது.

இந்த நிலையில் சிங்கங்களை வாகனத்தில் சென்று பார்க்கும் வசதி 3 ஆண்டுகளுக்கு பிறகு இன்று வண்டலூர் பூங்காவில் தொடங்கப்பட்டது. இதனை வனத்துறை அமைச்சர் மதிவேந்தன் பூங்காவில் நடைபெற்ற வனவிலங்கு வார கொண்டாட்டங்கள்



நிகழ்ச்சியின்போது தொடங்கி வைத்தார். இதேபோல் மான்களை வாகனத்தில் சென்று பார்வையிடும் வசதியும் தொடங்கி வைக்கப்பட்டது. ஏ.சி. பஸ்சில் பார்வையாளர்கள் சென்று சிங்கம், மான்களை பார்வையிடலாம். ஒரு பஸ்சில் ஒரே நேரத்தில் 28 பேர் பயணிக்க முடியும்.

இதேபோல் நுழைவுச் சீட்டில் கியூஆர் கோடு ஸ்கேனர் வசதி, நுழைவுச் சீட்டு வழங்க 2 கவுண்டர்கள், உலக தரம் வாய்ந்த உணவகம், முதுமலை வனத்துறை என்ற இணையதளம், வண்டலூர் உயிரியல் பூங்காவில் புதிதாக கட்டப்பட்ட வன உயிரினங்களுக்கு சிகிச்சை அளிக்க பல்வேறு வசதிகளுடன் கூடிய ஆஸ்பத்திரி ஆகியவையும் தொடங்கி வைக்கப்பட்டது.

வண்டலூர் பூங்காவில் 3 ஆண்டுக்கு பிறகு சிங்கங்களை வாகனத்தில் சென்று பார்வையிடும் வசதி செய்யப்பட்டு உள்ளதால் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சி அடைந்து இருக்கிறார்கள். பூங்கா நிர்வாகத்தினரின் ஏற்பாடுகளுக்கு பாராட்டு தெரிவித்து உள்ளனர்.

- A.ஜயப்பன்


**பேனா குரல்**
**PENA KURAL**
தமிழ் மாத இதழ்

உரிமையாளர் & அச்சிட்டு வெளியிடுபவர் :
நா வீ சிவசங்கர்

ஆசிரியர் : ராதிகா. சி, B.E.,

துணை ஆசிரியர்கள் :
துரை. சந்துரு, ந.திவாணன், M.சந்திரசேகர்
K.அழகர்சாமி, வீ.அய்யனார், பி.ஸ்டாலின்
பா.கார்த்திகேயன், B.நாராயணசாமி,
T.சிவக்குமார், M.அறிவுநிதி

தலைமை நிருபர்கள் :
பா.நவின்குமார், R.ஹரிகிருஷ்ணன்,
பா.சரவணன், A.தங்கராஜ்,
K.மாரிதுரை, ம.திலிப் குமார்

நிருபர்கள் :
Ba.சரவணன், தமிழ் மணி, உ.சரவணன்,
கா.கலைமணி, தி.பாமா, ஜெபசீலன், கு.தீபக்,
தமிழினி, இளைய தர்ஷினி, P.ஜேசுராஜ்,
பா.அசோக்குமார், J.தனசேகர், தமிழ் வீரன்,
கா.சுபுலட்சுமி, அன்பு மணி, R.பிரகாஷ்,

புகைப்பட நிருபர்கள் :
வா.கவியரசன், கா.மிதுன் சாய்

ஓவியங்கள்: வீ.சந்தோஷ் குமார்

சட்ட ஆலோசகர்: G. நாகராஜ், B.Sc., LLB.,

இதழ் வடிவமைப்பு: *Tamilni Printz*

நிர்வாக அலுவலகம் :
பேனா குரல்
3/885, பிள்ளையார் கோவில் தெரு,
மேட்டுக்குப்பம், ஓ.எம்.ஆர், சென்னை,
தமிழ் நாடு, இந்தியா - 600097.

தொடர்புக்கு :
044-35906002, 9962245338
info@penakural.com
penakural@yahoo.com
www.penakural.com



* பேனா குரல் இதழில் வெளியாகும் பேட்டிகள், கதை, கட்டுரை, விளம்பரங்கள் மற்றும் செய்திகளில் வரும் கருத்துக்கள் சம்பந்தப்பட்டவர்களையே சாரும்.
* பேனா குரல் பத்திரிகை சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளும் சென்னை மாநகர நீதிமன்ற எல்லைக்குட்பட்டது.



Printed, Published and Owned by: NV SIVASHANKAR | Printed at: J.M.PROCESS, No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002. | Published at: No.7/13, 2nd Floor, Ponmanachemmal Street, MGR Nagar, Chennai - 600078. | Editor: RATHIKA S



SDA
வள்ளுவன் வாய்மை எப்படி பொய்த்து போகாதோ!
அதேபோன்று விலையும்! தரமும்!
உங்கள் ஸ்ரீதேவி ஏஜென்சிஸ் – ல் பொய்த்து போகாது!
பண்டிகைகால
அதிரடி ஆஃபர்களுக்கும் உண்டு...
ஸ்ரீதேவி ஏஜென்சிஸ்
Pay 50%
BALANCE AMOUNT
DAILY EMI
Wholesale Rate
Retail Shopping
0% Finance Available
Rs.12,999/-
Compo Offer
Rs.999/-
Rs.3699/-
Rs.3999/-
Rs.6999/-
Rs.7999/-
Avail Offer Rs.1000/- Advance
MANUFACTURING &
WHOLESALE SUPPLIER
CONTACT
8939406206
No.5, Poonamalli High Road, Near MGR University, Maduravayal, Chennai - 600095.


தீப்ஷிகா
ஆட்டோ ஒர்க்ஸ்
அனைத்து இருசக்கர வாகனங்களும் சரிபார்க்கப்படும்
All kind of bike service and care
Engine
Re - work
High Quality
Engine Oil
Refill and Maintance
100 % Genuine Parts
used for your bike
Air Filling
Tyre Puncher
Tube & Tube less
Respect
Service
PRICE
QUALITY
SERVICE
Deepshika Auto Works
# 3/896, Pillaiyar Kovil Street, Mettukuppam, Chennai - 600097.
9884166636, 7010399368